
# என் அக்காவின் கதை




பேராசிரியர் என். சண்முகலிங்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் அக்காவின் கதை

பேராசிரியர். என். சண்முகலிங்கன்

நாகலிங்கம் நூலாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

EN ACCAVIN KATHAI (Life of My Sister)

1933.05.05 - 2014.10.10 அபரபக்ஷ திருதியை

by Snr. Prof. N. Shanmugalingan

Cover Painting: Thavam

© Mrs Gowri Shanmugalingan

First Edition: 2014.11.01

Published by Nagalingam Noolalayam
Nagula Giri
Myliddy South, Tellippalai

Printed by : Harikanan, Jaffna



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

'நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை
நிலத்தில் யாருக்கும் அஞ்சாத நெறிகளும்
திமிர்ந்த ஞானச் செருக்கும்'

கொண்ட பாரதியின் புதுமைப் பெண்ணாக எங்கள் பண்பாட்டிற்கு பெருமை சேர்த்தவர் பேராசிரியர் மனோ சபாரத்தினம் அவர்கள்.

ஒரு பெரும் தாயாக ஆயிரக்கணக்கான பிள்ளை களின் வாழ்வுக்கு வழிகாட்டி நின்றவர்.

பேராசிரியர் "சண்" இன் அக்காவாக அறிமுகமான முதல் சந்திப்பிலேயே எனக்கும் அக்காவாகிய பேறினைத் தந்தவர்.

அவரது இழப்புத் தாங்க முடியாதது.

இந்தப் பெருந்துயரை "என் அக்காவின் கதை" என்ற இலக்கியமாக்கும் சண்ணின் இந்தப் படைப்பானது அவருக்கும் எங்களுக்குமான ஆறுதலையும் எதிர்கால சந்ததியினருக்கான ஆற்றல்களையும் தந்திட வேண்டு கின்றேன்.

**பேராசிரியர் முனைவர் சீ. பக்தவத்சல பாரதி**
இயக்குநர்
புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம்
புதுச்சேரி, இந்தியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

அம்மாவுக்குப்பின் அக்கா வகித்திருந்த எங்கள் நாகலிங்கம் நூலாயத்தின் அதிபர் பொறுப்பு எனதாகி யுள்ளது.

அம்மாவாக இருந்து எங்களை வழிநடத்திய அக்காவின் நினைவெழுதும் 'என் அக்காவின் கதை' "நாகலிங்கம் நூலாலயத்தின்" பன்னிரண்டாவது வெளி யீடாக அமைகின்றது. 'பிள்ளை.... பிள்ளையென்று' அன்பு கனிந்திட அக்காவோடு உறவாடிய அப்பாவின் நினைவுகளைப் பேணும் நாகலிங்கம் நூலாலயத்தின் இந்த வெளியீடானது அப்பாவின் அன்புக்குப் பாத்திரமான எங்கள் அக்காவின் கதையைப் பேசுகின்றது.

அக்காவின் பெரு மனத்தினை அவரின் வல்லமை களைப் பதிவாக்கும் இந்த நூலின் வழி அவரது வாழ்வின் மேன்மைகள் எங்கள் எல்லோருக்குமான பாடங்களாகி நிலைபெற்றிடும்.

வாழுங்காலத்திலேயே அக்காவையும் அண்ணையை யும் தன் அழகிய ஓவியத்திற்குள் வடித்துத் தந்த ஓவியர் தவம் அவர்களின் நினைவும் இந்த நூலின் அட்டைப் படமாகி நிலைத்து நிற்கும்.

இந்நூலுக்கான அணிந்துரையினை வழங்கியுள்ள அக்காவின் மீது பெருமதிப்புக் கொண்ட அக்காவின் அன்புக்குப் பாத்திரமான புதுச்சேரி மொழியியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவன இயக்குநர் பேராசிரியர் பக்தவத்சல பாரதி அவர்களுக்கும் நிறைவுரையை நல்கிய எங்கள் இராஜேஸ்கண்ணனுக்கும், அக்காவின் இந்தப் பிரிவுப் பொழுதில் எங்களோடு உடனிருந்தும் தங்கள் எழுத்துக்கள் மூலமும் அக்கா மீது கொண்ட உள்ளார்ந்த அன்பினைப் பகிர்ந்து கொண்ட அத்தனை பேரும் அக்காவின் ஆத்ம ஆசிக்குரியவர்கள்.

அக்காவின் பொன்னடிகளில் இந்நூல் அர்ப்பணம்.

**டாக்டர் நாகேஸ்வரி நாகலிங்கம்**
அதிபர், நாகலிங்கம் நூலாலயம்

கந்தன் அருள்
அம்பலவாணர் பாதை,
திருநெல்வேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கண்ணியது உன் புகழ்,
கற்பது உன் நாமம்,
கசிந்து பக்தி பண்ணியது
உன் இரு பாதாம்புயத்தில்,
பகல் இரவா நண்ணியது உன்னை
நயந்தோர் அவையத்து–
நான் முன்செய்த புண்ணியம் ஏது
என் அம்மே!
புவி ஏழையும் பூத்தவளே.

–அபிராமி அந்தாதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் அக்காவின் கதை

"எனக்கொரு அக்கா இருக்கிறாள் - என் வாழ்வின்

அர்த்தங்களின் ஆதாரமாய்....."

என நெஞ்சு நிறைய பாடிநின்றேன்; நெஞ்சு நிமிர வாழ்ந்திருந்தேன்.

அக்காவின் நீழலில் இறுமாந்திருந்த என்வாழ்வில் சடுதியில் இப்படி நேருமென சற்றேனும் நினைத்ததில்லை.

வெள்ளியிரவு 8.24

அக்காவின் தொலைபேசி அழைப்பில்

"நீ எப்ப வருவாய்?"

"வழமைபோல காலையில் 6 மணிக்கு கோப்பியுடன் நிற்பன் தானே"

மீளவும் அதே கேள்வி......

"காலையிலே வந்திடுவன் தானே, ஒண்டுக்கும் யோசிக்காமல் 'ரிலக்சா' நித்திரையைக் கொள்ளுங்கோ"

"ஓமடா......"

"குட் நைற்"

பதிலுக்கு குட் நைற் சொல்லவில்லை. அக்காவைத் தொல்லைப்படுத்தக் கூடாதென்று அவருக்காவும் நானே சொல்லிக்கொண்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களுக்கிடையிலான இறுதி உரையாடல் இது என்ற விதியை அறியாமலேயே அக்காவுடன் உரையாடிய மகிழ்ச்சியை கௌரியுடன் பகிர்ந்து பத்துப் பதினைந்து நிமிடங்கள் ஆகியிருக்காது. டொக்டர் சிவன்சுதன் அவர்களின் அழைப்பில் நாங்கள் வைத்தியசாலைக்கு விரைந்ததும்......

எல்லாம் முடிந்த இரவாக அந்த நாள் எழுதப் பட்டது.

அக்காவின் விருப்படியே உறவுகள் சூழ இறுதிக் கிரியைகளை முடித்து அம்மாவின் அஸ்தியைக் கரைத்த அதே கீரிமலை தீர்த்தக் கரையில் அக்காவின் அஸ்தியை யும் சங்கமமாக்கி............ எல்லாம் திடுமென முடிந்தன.

அக்கா இல்லாத வீடு......

அக்கா இல்லாத வாழ்வு...... நினைக்கவே முடிய வில்லை.

எல்லாம் வெறுமையாய்........

எல்லாம் இருளாய்........

இருளுக்குள் அழுவதே இருப்பாய்...........

நான் அழுத பொழுதுகளில் எல்லாம் என் ஆறுதலாக உடனிருந்தவள்..... நான் விழுந்த வேளைகளிலெல்லாம் ஓடோடி வந்து என்னைத் தூக்கிவிட்டவள்....... என் உயர்வுகள் யாவிலும் 'என்ரை தம்பி' என பெருமிதத்து டன் அகமகிழ்ந்து திளைத்தவள்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று எரியும் நினைவுத் தீபத்தின் சுடருக்குள் ஒடுங்கிய தெய்வமாய்........ அந்த தீபத்துக்குள் அவளின் ஆசை வதனத்தை...... அன்பான வார்த்தைகளை தேடும் வழிபாடே இருப்பாகும்.

அவளின் மேலான நினைவுகளுக்குள் உயிர்க்கும் இந்தப் பொழுதிடை அவள் வாழ்வின் மேன்மைகளை, கனவுகளைக் காக்கும் - வாழவைக்கும் உறுதியுடன் 'என் அக்காவின் கதையை' எழுதும் பெருந்தவமே இனியென் வாழ்வாகும்.

என் அக்காவின் கதையை எங்கே தொடங்குவேன்... எப்படி எழுதுவேன்... காவியமான அவள் வாழ்வை எழுதி முடிக்க என் வாழ்நாள் போதாது என்பதை அறிவேன். ஆனாலும் வாழுகின்ற போதே அக்காவை என் கவிதை வரிகளுக்குள் சித்திரிக்க முடிந்த பொழுதின் பெறுமதியை இந்தக் கணத்தில் நினைத்துப் பார்க்கின்றேன்.

எனக்கொரு அக்கா இருக்கிறாள்
என் வாழ்வின்
அர்த்தங்களின் ஆதாரமாய்
கல்வியினால் உயர்ந்த கலைமகள்
இல்லாமை ஒழித்து நிற்கும் திருமகள்
எல்லோர்க்கும் வாழ்வென்னும் பெருமகள்
அதனால்
ஏழைகளுக்கு அவளென்றும் மலைமகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளுடைய பாதையிலே
அடியெடுத்து வைத்தவன்
அறிவியலின் கோலங்களை
அளந்து படிப்பவன்
ஆயகலைகளிலும் ஆற்றல் வளர்ப்பவன்
அதனால்
அவளைப் போல் அன்பினால்
உலகாள்பவன்

தனக்கென பொருளெதையும்
சேர்க்காதவள்
தளர்ந்தொருநாள் நோயென்று
இருக்காதவள்
எனக்கென சொல்லித்தரும் மந்திரங்களில்
உழைப்பென்ற அற்புதமே
உயர்வென்பவள்
அக்கா என் ஆதாரம்

என் சந்தன மேடை முதல் கவிதைத் தொகுதியில் இடம்பெற்ற இந்தக் கவிதையை அக்காவின் தலைமையி லேயே மட்டக்களப்பு நூலகத்தில் இசையோடு அரங்கேற்றிய அந்த நாளின் பெருமிதம் அழியாதது.

கல்வியே அக்காவின் மூச்சானது.

கல்வியை எல்லோருக்கும் தரும் பேரன்பே அவள் வாழ்வானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுவே என் அக்காவின் கதையின் உட்பொருளு மாகும்.

'விண் கண்ட தெய்வம் பல்கோடி உண்டேனும் விளம்பில் உன்போல் கண்கண்ட தெய்வம் உளதோ சகலகலாவல்லியே' என பாடுகின்ற ஒவ்வொரு சந்தர்ப் பத்திலும் என் கண்ட தெய்வமாக உடனிருக்கும் அக்காவின் தரிசனம் என் வரமானது.

இந்த வரம் எனக்கானது மட்டுமல்ல. எல்லையற்று விரிந்த அவளின் பெரும் மனம் போல எல்லோருக்கும் சொந்தமானது.

கல்வியை பொருளீட்டுவதற்கான கருவியாகக் காணும் இன்றைய குறுகிய இருப்புக்களிடை கல்வியே வாழ்வென நிமிர்ந்தது என் அக்காவின் வாழ்க்கை.

ஆடம்பரங்களை தூரத்தள்ளிய ஆரவாரம் இல்லாத அவளின் அழகெல்லாம் கல்வியினால் வாய்த்த அழகென்றால் மிகையில்லை.

***

***1933.05.05*** இல் மலேசியாவில் அக்கா மனோன் மணியின் உதயம். அந்நாளில் மலேசிய ரெயில்வேயில் பணிபுரிந்த திரு சபாரத்தினம்-லக்ஷ்மிப்பிள்ளை மணவாழ் வில் செல்வப் புதல்வி. நவரத்தினம், கனகரத்தினம், ஞானவல்லி ஆகியோரின் அன்புத் தங்கை.

ஊருக்கு மீண்டு நல்லூர் செட்டித் தெருவில் முருகன் ஆலயத்திற்கு அருகில் அமைந்த தந்தையாரின் பாரம்பரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லத்தில் அழகாய்த் தொடங்கிய வாழ்வின் மகிழ்ச்சி, திடீரென நோய்வாய்ப்பட்ட தாயின் இழப்புடன் முடிந்து போகும். ஆறுவயதிலேயே அம்மா இல்லாத பிள்ளையாக அக்காவை ஆக்கும். அப்பாவின் அரவணைப்பும் பன்னிரண்டு வயதுடன் முடிந்து போகும். 'கருணையில்லாத கடவுள் எங்களை அநாதையாக்கினார்' என கண் கலங்க அக்கா கூறுகின்ற கணங்களில் அவள் நெஞ்சத்து உயிர் வலியை மனவடுவை உணரமுடியும். ஆனாலும் அப்பாவின் சகோதரி குட்டி மாமி உடனிருந்து தங்களை பேணி வளர்த்ததையும் தங்கள் கல்வியில் அதிக நேரம் செலவு செய்து நெறிப்படுத்திய பெரிய மாமியையும் நெஞ்சார நினைவு கூர்ந்து அவர்களின் அன்பினை தமதாக்கிய கடவுளுக்கு நன்றியும் சொல்லுவார்.

எல்லா இழப்புக்களின் வலியையும் கல்வியின் வழியாக மேவிடும் தவம் அக்காவின் வாழ்வின் தடமானது. சின்ன வயதிலிருந்தே தந்தையார் விதைத்த கல்வி ஆர்வமும் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் அவருக்கு வாய்த்த ஆசிரியர்கள் அதிபர் ஆகியோரின் வழிகாட்டல்கள் துணைநிற்க கல்வியிலே சிறந்து விளங்கினார். க.பொ.த உயர்தரப் பரீட்சையில் முதல் தடவையிலேயே சிறப்பான சித்தி பெற்று **1956** இல் இலங்கை பல்கலைக்கழகத்திற்கு உயிரியில் விஞ்ஞான கற்கைக்கென நேரடியாகவே அனுமதி பெற்றார். **1961** இல் விலங்கியல் துறையில் சிறப்பு விஞ்ஞானமாணிப் பட்டத்தினைப் பெற்றார்.

இவரது திறமையை அறிந்து கொண்ட தெல்லிப் பளை மகாஜனக் கல்லூரியின் சிற்பியான தெ.து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயரத்தினம் அவர்கள் உயர்தர வகுப்பில் விலங்கியல் கற்பிக்கவென அழைத்தார். அந்நாட்களில் ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படாத நிலையிலும் கல்வி அமைச்சின் செயலாளர் திரு பாஸ்கரலிங்கம் அவர்களின் நேரடி முயற்சியில் நியமனம் வழங்கப்பட்டது. பின்னர் தன் அறிவை வளப்படுத்தவும் பகிர்ந்து கொள்ளவும் உயர் கல்வி நிறுவனமே பொருத்தமானது என உணர்ந்த நிலையில் யாழ்ப்பாணக் கல்லூரியின் பட்டப்படிப்பு பிரிவில் விரிவுரையாளராக இணைந்து கொண்டார். 1968 இல் அக்காவின் நெடுநாள் கனவு நனவாகியது. கொழும் புப் பல்கலைக்கழகத்தின் விலங்கியல் துறை விரிவுரை யாளராகும் வாய்ப்பு அவருக்கானது.

விரிவுரையாளராகி குறுகிய காலத்துள்ளாகவே அவரின் உயர்கல்விக்கான தாகமும் தேடலும் வாய்ப்பும் ஒருங்கு சேர புகழ்பூத்த ஸ்கொட்லாந்து தேசத்தின் எடின்பரோ பல்கலைக்கழகத்தில் கலாநிதிப்பட்ட ஆய்வில் இணைந்து கொண்டார். உரிய காலத்துக் குள்ளாகவே பேராசிரியர் கலாநிதி எச். சி. பெனற் கிளாக் (Dr. h;. C. Bennet Clark) அவர்களின் வழிகாட்டலின் கீழ் "Structure and Development of Elastic Tendons in Diptera" எனும் தலைப்பில் Insect Physiology துறையில் 1972 டிசம்பர் மாதத்தில் தன் கலாநிதிப்பட்ட ஆய்வேட்டினைச் சமர்பித் தார். 1973இல் கலாநிதியாக நாடு திரும்பி 1981 வரையில் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் விலங்கியல் துறையில் சிரேஷ்ட விரிவுரையாளராகப் பணியாற்றினார். இன்று இத்துறையில் புகழ்பூத்த பேராசிரியர்கள் ஆய்வாளர்கள் பலரையும் உருவாக்கிய காலமிது. இக்காலப் பகுதியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராதனை விவசாய பீடத்தின் உயர் பட்டப் படிப்பு நிறுவகத்தின் வருகைப் பேராசிரியராகவும் ஆய்வு ஆலோசகராகவும் விளங்கியிருக்கிறார். இதனைவிட மட்டக்களப்பு மாவட்டத்தின் கஜூ பயிர்ச்செகை தொடர்பான ஆய்வுத் திட்டமொன்றின் வழி காட்டியாகவும் விளங்கினார்.

அக்காவின் தண் நீழலில் என்னுடைய உருவாக்கம் நிகழ்ந்ததும் இந்தக் காலத்திலே தான்.

'ஆசைமாமியும் அப்பாவும்' படித்த பல்கலைக் கழகம் என இன்று கொழும்புப் பல்கலைக்கழகத்தினை அம்பிகைக்கு அறிமுகம் செய்து பெருமிதப்படும்படியான வாழ்வு எனக்கு கைகூடிய காலம் அது.

அக்காவின் அற்புதமான ஆளுமையின் ஆட்சியிலே எனது கல்விப் பயணமும் சாதனைகளும் எழுதப்பட்டன. பல்கலைக்கழக கல்வியின் பெறுமதியை எனக்கு உணர்த்திய என்னை எனக்கு அறிவித்த செழுங்கலை நியமமாக வே அக்காவின் தரிசனம் எனக்கானது. வீடே பல்கலைக் கழகமான பெரும்பேற்றில்

அவளுடைய பாதையில் அடியெடுத்து வைத்தவன்
அறிவியலின் கோலங்களை ஆழ்ந்து படித்தவன்
அதனால்
அவளைப் போல் அன்பினால் உலகாள்பவன்

என்று பாடிப்பரவுகின்ற பெருவாழ்வு எனக்காகும்.

அக்காவின் அன்பும் அதற்கு சமாந்திரமான கண்டிப்பும் என்னை ஆளாக்கிய அரண்களாகும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு வாய்த்த ஒவ்வொரு சந்தர்ப்பங்களையும் தயக்கமின்றி நான் சந்திக்கவும் வெற்றிகாணவும் அக்கா உடனிருந்து தந்த தைரியம் துணையானது. என்வாழ்வின் ஒவ்வொரு திருப்புமுனைகளிலும் அக்கா தந்த ஆத்ம பலம் உயிரானது....

ஒன்றா... இரண்டா... எதையென்று சொல்லு வேன்.... என்புலமை வாழ்வின் செந்நெறியை தீர்மானித்த காரணராகி என் கலாநிதிப்பட்ட ஆய்வினையும் வழி காட்டிய என் குருதேவரான பேராசிரியர் கணநாத் ஒபயசேகரா அவர்களை இரண்டாம் ஆண்டு பல்கலைக் கழக மாணவனாக இருந்த காலத்திலேயே அறிந்து கொள்ளவும் அவரின் ஆய்வு உதவியாளராகவும் தூண்டு கோலாக இருந்ததைச் சொல்வேனா......

"(f)பெஸ்ற் கிளாஸ் எடுக்கவேணும். இல்லையெண் டால் பேசமாட்டன்"

நித்திரையிலும் "பெஸ்ற் கிளாசுக்காக 'A' களை கைவிரல்களில் எண்ணிக்கூட்டிய பொழுதுகளை அக்கா சொல்லி அறிந்த போது ஆழ்மனது வரை பதிவாகிய அக்காவின் பேராவலை நினைத்து பெருமைப்படுவேன்.

"ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்மகனை
சான்றோன் என கேட்ட தாய்"

என அம்மாவும் அக்காவும் அவையத்து முந்தியிருந்த அப்பாவும் கூடிக்களிக்க 'பெஸ்ற் கிளாஸ்' பட்டதாரியாக பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டமளிப்பு விழா கண்ட அந்த நாளின் மகத்துவம் இணையில்லாதது......

இதுபோல இன்றுவரை எத்தனை எத்தனை பட்டமளிப்புக்கள்... துணைவேந்தராக நானே ஆயிரக் கணக்கான பிள்ளைகளின் பட்டமளிப்பினை நடத்திய பெரும் பேறுகள்....

எல்லாமே அக்கா என்ற ஆதார சுருதியினால் நிகழ்ந்த ஆலாபனைகள் தான்....

நன்மைகள் தீமைகள் யாவிலும் உடனிருந்து ஒரு பெரும் வல்லமையாய் எங்களை காத்திருந்தாள் அக்கா......

"கட்டுவனுக்கு ஆமி வந்தது, வீடுவீடாக சோதித்துப் போனது, ஊரே அன்று இடம்பெயர்ந்தது, ஆனால் அப்பா மட்டும் வீட்டைவிட்டு வரமாட்டேன்" என்ற தொலைபேசி செய்திக்கு மறுநாளே மிகக் கடுமையான அந்நாள் பயணத்தில் மட்டக்களப்பிலிருந்து அக்கா ஓடோடி வந்ததும், அப்பாவை தன் மந்திரச் சொல்லால் கட்டி திருநெல்வேலிக்கு நாங்கள் இடம்பெயர்ந்ததும்.....

என் பதியெழு அறியா என்கின்ற சிறுகதையில் வருகின்ற அக்கா பாத்திரம் கற்பனையல்ல......

அந்நாட்களில் எனக்குள்ளிருந்த கவிஞனை நான் காண வழிகாட்டிய முதல் ரசிகை அக்கா.......

"பஸ் டிக்கேற்றுக்குப் பின்னாலும் கவிதை எழுது வான் தம்பி, கம்பஸ் ஹோல்ற்றைத் தாண்டி அடுத்தடுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹேரால்ற் வரைதன்னை மறந்து பாட்டெழுதுவான்" என்று பெருமையோடு என்னைத் தட்டித் தருவாள்.

அக்காவின் ரசனை தனித்துவமானது. Mozart, Bethoven இசைக்கோலங்களை அன்றைய spool ரேப்பில் ஒலிப்பதிவு செய்து கேட்டு மகிழ்வாள். மேலை செவ் வியல் இசை பற்றிய எனது அனுபவப் பாடங்களின் குருவாகவும் அவளை கூறுவேன். தியாகராஜ பாகவதரின் பாடல்களில் அக்கா அடையும் நிறைவு இணையில்லாதது. பின்னாளில் என்னுடைய ஆக்க இசைப் பாடல்கள், கொழும்பு பல்கலைக்கழக தமிழ்ச் சங்க கலை அரங்கு களிலும் இலங்கை வானொலியிலும் ஒலித்த தருணங் களில் அக்காவிடம் இருந்தது கிடைத்த பின்னூட்டல்கள் மிகப் பெறுமதியானவை.

அன்று யுனெஸ்கோ விருதுக்கான சிறுவர் நாவல் போட்டியில் எனக்கு பரிசினை ஈட்டித் தந்த சான்றோன் எனக்க கேட்ட தாய் (1976) வெளிவர உடனிருந்து தூண்டி நின்றவள் அக்கா. பின்னாளில் இது நூல் வடிவம் பெற்ற பொழுது அதற்கான அணிந்துரையை (1993) வழங்க பொருத்தவமானராக அவளையே தெரிந்திருந்தேன்.

சண்ணின் 'சான்றோன் எனக்கேட்ட தாய்', நூல் வடிவம் பெறுவதில் அவனைப் போலவே எனக்கும் பெரு மகிழ்ச்சி.

மாணவனாக இருந்த காலத்து, எழுதிய நாவல் இன்று சிரேஷ்ட விரிவுரையாளனாக விளங்கும் காலத்து நாங்கள் கண்ட வளர்ச்சிக்குப் பின்னால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்திருக்கக் கூடிய சக்திகளை மீட்டுப் பார்க்கின்றேன்.

கொழும்பில் நாங்கள் இருந்த அந்தக் காலத்தில் கட்டுவனில் இருந்து வருகின்ற அம்மாவின் அப்பாவின் கடிதங்கள் என் நினைவுகளில் மேலெழுகின்றன. என்னைப் பொறுத்தவரையில் அவை இலக்கியங்கள்.

"ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக் கேட்டதாய்"

என்ற திருக்குறளின் பொருளை நான் தெளிந்து கொண்டது இந்தக்கடிதங்கள் வழியாகத்தான். ஐந்த வயதிலேயே தாயை இழந்து விட்ட எனக்கு தாயன்பின் பரிமாணங்களைச் சொல்லித் தந்த இந்தக் கடிதங்கள் எங்கள் உயர்வின் ஆதாரங்கள் என்பேன். சண் கொடுத்து வைத்தவன். அந்தக் குறளுக்கே இலக்கியம் படைத்திருக் கின்றான்.

கதையின் இலக்கிய நயமும் அது சொல்லும் சமூக உறவுகள், உணர்வுகள், மதிப்பீடுகள் என்பனவும் என்றும் வேண்டப்படுவன. இந்தக் கூறுகளை நீங்களும் உணர்ந்து சண்ணை வாழ்த்தலாம்.

ஈழத்து இலக்கியப் புலத்தில், ஏனைய இலக்கிய வகைகள் கண்ட முனைப்பு, சிறுவர் இலக்கியத் துறையைப் பொறுத்தவரை இன்னமும் ஏற்பட வில்லை யென்பது எனது அபிப்பிராயம். தரரீதியாக (Qualitative) மட்டுமன்றி அளவுரீதியாக (Quantitative)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வும் வளர்ச்சி வேண்டும். எங்கள் சமூக மேம் பாட்டிற்கான இந்தத்துறையில் எங்கள் கவனம் திரும்ப வேண்டும்.

சண்ணும் இந்தக் கதையோடு விட்டு விடாமல் தொடர்ந்து எழுத வேண்டும். கதைகளோடு விஞ்ஞான எண்ணக் கருக்களை (Concepts) கண்டு பிடிப்புக்களை எளிதாய் சிறுவர் மனங்களில் பதிக்கும் முயற்சிகளையும் தொடர வேண்டும் என்பது எனது விருப்பமாகும். அந்த நாட்களில் இலங்கை வானொலியில் சிறுவர்களுக்கான கல்வி ஒலிபரப்புக்களில் சண்ணும் நானும் தயாரித்தளித்த சில நல்ல நிகழ்ச்சிகள் இன்றும் அர்த்தமுடன் நினைக்கப் படுவன. அடிப்படை விஞ்ஞானக் கல்வியையும், பின் உயர் நிலையில் சமூக உளவியல் கல்வியையும் காணும் வாய்ப்பினைப் பெற்ற சண் இந்தத் துறையில் உச்சங்களை எட்ட முடியும் என்பது நம்பிக்கை. தம்பி சண்ணுக்கான என் ஆசியும் அன்பும் என்றுமுள்ளது.

சிறுவர் இலக்கிய ஆர்வலர்களான உங்கள் எல்லோருக்கும் என் அன்பான வாழ்த்துக்கள்.

அன்பின்

மனோ அக்கா.

அக்காவின் ஆசியோடு பின் நாட்களில் எத்தனை எத்தனை நூல்கள், ஆக்க இசைப் படைப்புக்கள், புலமை சார்ந்த எழுத்துகள்........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த நாட்களில் அக்காவிடம் கற்றுக்கொண்ட பாடங்கள் வெறுமனே பட்டப்படிப்புக்கள், நூல்கள் சார்ந்தவை மட்டுமல்ல. ஒரு புலமையாளருக்கு இருக்க வேண்டிய அறிவுத் துணிவையும் அர்ப்பணிப்பையும் அக்காவின் வாழ்வியல் பாடமாகவே அருகிருந்து பயிலக் கொடுத்துவைத்தவன் நான்.

1977 இனக்கலவர வேளை - இனக்கொலையாளிகள் 'கனல் ரோட்' வரை வந்திட்டார்கள் என்ற அச்சத்தில் அகதிமுகாம்களுக்குள்ளும், கப்பல் ஏறி யாழ்ப்பாணத்துக் கும் நம்மவர்கள் ஓடிய வேளை நாங்கள் தற்காப்பு ஏற்பாடுகளிலும், அகதிமுகாம் மக்களுக்குக்கான உதவியி லும் உறுதியாக இருந்தோம்.

அந்தநாளில் தமிழ் மாணவர்களின் உயர்கல்விக்கு உலைவைத்த தரப்படுத்தலை மேலும் இன அடிப்படை யில் வகுத்தக் கொள்வதற்கென பேரினவாத அமைச்சர் சிறில் மத்தியூ ஆடிய நாடகத்தில் தமிழ்ப் பரீட்சகர்கள் அதிக புள்ளிகளைக் கொடுத்தார்கள் என ஒரு போலிக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. இந்தப் பிரசாரத்தில் விலங்கியல் (A/L) வினாத்தாள் திருத்தத்தினை மேற்கோள் காட்டியபோது, துடித்தெழுந்த அக்கா, அந்நாளின் பாராளுமன்ற உறுப்பினர்களான திரு சிவசிதம்பரம், திரு அமிர்தலிங்கம் ஆகியோரினூடாக உண்மை நிலையை ஒரு Affidavit பாராளுமன்றத்தில் தெளிவுபடுத்தி இந்த விடயம் தொடர்பான முழுமையான பாரபட்சம் அற்ற விசாரணையைக் கோரிநின்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1978 டிசம்பர் 11ஆம் திகதி பாராளுமன்ற ஹன்சாட்டில் இந்த விவாதம் முழுமையாக வெளிவந்திருந்தது.

ஆனால் அத்தகைய ஒரு விசாரணை இன்று வரை நடந்ததில்லை.

அக்காவின் இந்த துணிச்சலான எதிர்ப்பினை அடக்கவும் அச்சப்படுத்தி பணியவைக்கவும் என அந் நாளில் நாங்கள் குடியிருந்த வீட்டை நோக்கி ஏவிவிடப் பட்ட காடையர்களிடமிருந்து அக்காவின் நேர்மையான நெஞ்சத்து வலிமையும் ஆத்மபலமுமே துணையானது என்பேன்.

அக்காவின் இந்த நீதிக்கான போராட்டம் பின்னாளில் இலங்கையில் கல்வியும் இன உறவும் என்ற கௌரியின் முதுமாணிப் பட்ட ஆய்வில் முக்கியமான தொரு விடயக்கலை ஆய்வாகும்.

இனவாத நோக்கிலான இந்த செயற்பாடுகள், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவர் தன் கடமைகளைச் செய்வதற்குத் தடையானதில்லை அவரைத் தளர வைத்ததில்லை. கொழும்புப் பல்கலைக்கழக விலங்கியல் துறை பணிகளோடு இன்றைய திறந்த பல்கலைக் கழகத்தின் மூல அமைப்பாக விளங்கிய இலங்கைத் தொலைக்கல்வி நிலையத்தின் பாட அலகுகளைத் தயாரிப்பதில் அக்காவின் உதவி நிறையவே இருந்தது. அவ்வேளை சில கட்புல செவிப்புல கல்விப்பாட அலகுகளை மொழியாக்கம் செய்து குரல் தரும் வாய்ப்பு எனக்கு கிடைத்ததும் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி விரிவாக்கத்தில் அக்கா கொண்ட இந்த ஆர்வத்தினையும் உணர்ந்து கொண்ட இலங்கை திறந்த பல்கலைக்கழகம் அவரை தங்கள் பீட அவையின் அங்கத்தவராகவும் விலங்கியல் பாடத்தின் சிரேஷ்ட இணைப்பாளாராகவும் நியமித்தது.

அறிவு என்பது சமூகப்பயனான அறிவாக அமை தலின் முக்கியத்துவத்தினை அடிக்கடி வலியுறுத்தும் அக்கா அந்நாட்களில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபன தேசிய சேவையின் விஞ்ஞான உலகம் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு ஆற்றிய சொல்லாடல்கள் மிகவும் பெறுமதியானவை. இந்நிகழ்ச்சிகளை பேராசிரியர் என். சண்முகரத்தினம் அவர்கள் தொகுத்தளித்திருந்தார். அன்று தொடங்கிய உறவின் அறிமுகத்தில் அக்காவின் மறைவுச் செய்தியை அறிந்த கணத்திலேயே நோர்வேயி லிருந்து அவர் அனுப்பிய செய்தியில் அக்காவின் ஆளுமை, கிழக்குப் பல்கலைக்கழக வளர்ச்சியில் அக்காவின் இடம் பற்றியும் கிழக்குப்பிரதேச மக்கள் மத்தியில் அவருக்குள்ள மதிப்புப்பற்றியும் குறிப்பிடுவார். கிழக்கு பிரதேசத்துக் கிராமங்களில் பேராசிரியர் மேற் கொண்ட சமூக-பொருளாதார ஆய்வுகளினடி யாகவே அவரது இந்த கணிப்பீடு அமைந்தது.

1981இல் அக்காவும் நானும் கிழக்குக்கும் வடக் குக்கும் இரு வேறு திசைகளில் ஆனாலும் ஒரே நோக்கில், புறப்பட்ட ஆண்டானது. அக்கா பேராசிரியராகக் கிழக்கில் பல்கலைக்கழகத்தை கட்டமைக்கும் பணிக் காகச் சென்றதும் நான் யாழ்ப்பாணப் பல்கலைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழகத்தில் சமூகவியல் துறை விரிவுரையாளனாகச் சேர்ந்து கொண்டதும் எங்கள் வாழ்வின் மேன்மைகளுக்கான திருப்பங்களாகும்.

1981 மே நான்காம் திகதி மட்டக்களப்புப் பல்கலைக் கழக கல்லூரியின் பேராசிரியர் நியமனத்திற்கான நேர்முகத் தேர்வுக்காக மானியங்களின் ஆணைக்குழுத் தலைவர் பேராசிரியர் கல்பஹேற அவர்களினால் அக்கா அழைக்கப்பட்டிருந்தார்.

நீளப்பழகிய சூழல், கொழும்புப் பல்கலைக்கழக வசதிவாய்ப்புக்கள், மாணவர்களை சடுதியில் விட்டுச் செல்லுதல், புதிய சூழமைவு பற்றிய உரையாடல்களுக் கிடையில் அன்றைய தினம் முடிவைச் சொல்ல முடிய வில்லை. 'மறுநாள் நல்ல முடிவோடு வரவேண்டும்' என்பது மானியங்கள் ஆணைக்குழுத் தலைவரின் வேண்டுதலாக இருந்தது.

அன்று இரவு நீள விரிந்த கலந்துரையாடலில் "ஒரு பிரதேசத்தின் கல்வி மேம்பாட்டுக்கான அழைப்பு" என்ற எண்ணமே மேலெழுந்தது.

மறுநாள் காலை விடிகின்ற போது இந்த முடிவு தெளிவாகவே இருந்தது.

காலையில் வாகனம் அனுப்பி அழைத்திருந்தார்கள். நேற்று முடிவெடுக்கப்படாமல் ஒத்திவைக்கப்பட்ட நேர்காணல் அக்காவின் பிரசன்னத்துடன் 'Happy Birth Day



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Professor Mano' என்ற ஒரே வார்த்தையுடன் நிறைவுக்கு வந்தது. ஆமாம் மே ஐந்து தான் அக்காவின் பிறந்த தினமும்.

அக்கா மட்டக்களப்புப் பல்கலைக்கழகக் கல்லூரியைச் சேர்ந்த அந்த முதல் நாள் நினைவுகள் இன்னமும் பசுமையாய் நெஞ்சிலே உள்ளது. அக்காவுக்கென ஒரு பெரிய பங்களா கட்டித்தரப்படும், அதுவரை தற்காலிகமாக விடுதியில் தங்குவதென்பது ஏற்பாடு.

மாலை கருகும் வேளையில் நாங்கள் அங்குபோய்ச் சேர்ந்திருந்தோம். திடுமென மின்சாரம் நின்று போனது. இனி வராது என்ற நிலையில் பிள்ளைகளின் அந்தரிப்பு

அரிக்கன் லாம்பு கொஞ்சம் வாங்க வேணும்...

எங்கே வாங்கலாம்...

செங்கலடியில் வாங்கலாம் அம்மா...

இது விடுதி தேநீர்ச்சாலைப் பொறுப்பாளர் பழனி.

பழனியின் சைக்கிளை வாங்கிக் கொண்டு செங்கலடிக்கென்று எதிர்திசையில் ஓடியதும் பின் பழனி திசை காட்ட சரியான பாதையில் போய் அரிக்கன் லாம்புகளை வாங்கி வந்ததுமென சுவாரசியமான பல நிகழ்வுகள்.

விளக்குகளை ஏற்றிய சில நிமிடங்களில் "ஐயோ பாம்பு மெடம்" என அலறுவாள் ஒரு மாணவி.

இருளோடு பாம்புக்கும் சேர்த்து தைரியம் தரும் பணி அக்காவுக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொஞ்ச நேரத்திற்குள் நிலைமை சுமுகமாகும். மறுநாள் நவராத்திரி பூசையில் பாடுவதற்கான பாடல் களை பிள்ளைகளை அழைத்து தமிழோடு இசைபாட வைக்கும் பணி நடக்கும்.

பாடிமுடிந்தது டினர் நேரம். 'டினர் ரெடியம்மா' என பழனி சாப்பாட்டைக் கொண்டுவந்து தருவார்.

தோசையும் சொதியும்.

புது அனுபவம் தான் ஆனாலும் பழனியின் அன்பான பரிமாறலில் அதன் சுவை இன்றுவரை எங்கள் சொல்லாடல்களில் சிலாகிக்கப்படும்.

இன்று கிழக்குப் பல்கலைக்கழகம் பல வசதிகள் வாய்ப்புக்களைத் தன்னகத்தே கொண்டு பெருமைப்படும். அன்றைய தொடக்காலத்து நிலமை எப்படி என்பதை எங்கள் முதல் நாள் அனுபவம் உணர்த்தி நிற்கும்.

உட்கட்டுமான வசதிகள் மட்டுமல்ல ஏனைய கல்விசார், கல்விசாரா ஆளணி தொடர்பிலும் மிகுந்த மட்டுப்பாடுகள் தான்.

மட்டக்களப்பு பல்கலைக்கழக கல்லூரியின் ஸ்தாப கர்களில் முதன்மையானவர், பேராசிரியர், முதல் விஞ்ஞான பீடாதிபதி, பல சந்தர்பங்களில் பதில் துணை வேந்தர்.

புதிதாய் அமையப்பெற்ற பல்கலைக்கழகத்தின் பீடாதிபதிக்கான நிருவாக கடமைகளுடன் விலங்கியல் துறை மாணவர்களுக்கான அத்தனை விரிவுரைகளுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பான ஒரே ஆசிரியராக சற்றும் தளராது அக்காவின் பணி விரிந்திருந்தது.

மட்டுப்படுத்தப்பட்ட வளங்களுடனும் புதிதாய் அமைப்பெற்ற கலைத்திட்டத்துடனும் ஆசிரியர் குழாத்தினரின் அர்ப்பணிப்பான ஈடுபாட்டுடனும் பல்கலைக்கழகத்தின் கல்வியின் தரம் பேணப்பட்டது.

ஆனாலும் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டு பத்து ஆண்டுகள் ஆன போதிலும் அத்தியாவசியமான கட்ட ட்ட வசதிகளை வேண்டிய ஆய்வு கூட வசதிகளை ஏற்படுத்திக் கொள்ள முடியாமை பற்றிய கவலை பல்கலைக்கழகத்தின் பத்தாவது ஆண்டு நினைவேட்டில் The Faculty of Science: Its past, present and future *(1991)* என்ற தலைப்பில் அக்கா எழுதிய கட்டுரையில் பதிவுபெறும்.

"It is true that buildings do not make a university but then if we are to attract the staff and student we need buildings where they can carry out their academic programmes comfortably and at the same time we proud their university" (1991: 12)

அரசினால் பல்கலைக்கழகத் தொடக்க காலத்தி லேயே வாக்குறுதி அளிக்கப்பட்ட விஞ்ஞான பீட கட்டடத்தொகுதி பல்வேறு சாட்டுக்களுடன் இழுத் தடிக்கப்பட்டது. வந்தாறுமுலையின் நிலவளம் எல்லை யற்ற நீர்வளம் அதனுடைய புகையிரத, தரைப் பாதைச் சூழமைவு என்பற்றினை கருதிற்கொண்டு அன்று அப்பாப்பிள்ளை தலைமையிலான குழு எடுத்திருந்த முடிவினை காப்பதில் அக்கா இறுதிவரை உறுதியாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தார். இதே வேளையில் நகரத்து நெருக்கடிக்குள் தங்கள் வசதியான இருப்பிடங்களுக்கு அண்மையில் பல்கலைக்கழகத்தை கொண்டுபோய்ச் சேர்க்கும் முயற்சிகள், அக்காவினதும் அக்காவைப் போன்ற உண்மையான மேம்பாட்டுச் சிந்தனை கொண்ட பல்கலைக்கழகச் சமூகத்தினரதும் உறுதியான செயல்பாட்டினால் தடுக்கப் பட்டது.

பல்கலைக்கழகத்தின் வருகையுடன் தங்கள் வாழ்வாதார, வாழ்வியல் நிலமைகளிலும் விடிவு ஏற்படும் என்ற வந்தாறுமுலை பிரதேச மக்களின் கனவைக் காப்பதில் அக்காவின் பணி நிறையவே இருந்தது. இந்தப் பிரதேசத்துப் பிள்ளைகளின் கல்வி வாழ்வாதாரத் தேவைகளில் தன் மாணவர்களைக் கொண்டு தனிப்பட்ட முறையிலும் அக்கா ஆற்றிய பணிகள் அளப்பரியது.

"The existence of the University should not only be for the training of under graduates, it must serve the community as well at large. We are hoping to bring a close rapport between the university and teachers in the school of this area. This is the only means by which teachers at secondary and tertiary levels of education will have a better understanding of the needs of the country and can plan our curriculum and methodology of teaching to suit these needs

என்ற தெளிந்த சிந்தையோடு விஞ்ஞான பீடத்தை கணனி விஞ்ஞான பிரிவின் கல்வி விரிவாக்க செயற்பாடுகளைத் திட்டமிட்டு வெற்றியும் கண்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழமைவின் பாடசாலை மாணவர்கள் பிரதேச மக்கள் ஆகியோரார் கணனி விஞ்ஞான அறிவை பெறக்கூடிய வகையில் இக் கற்கைநெறி அமைந்திருந்தது.

கிழக்குப் பல்கலைக்கழக விஞ்ஞான பீடம், முன்னோடியாக பல சீர்திருத்தங்களை அறிமுகம் செய்வதற்கு எடின்பரோ பல்கலைகழகத்தில் தான் பெற்ற அனுபவங்கள் பெரும் துணையாக அமைந்தன என்பார் அக்கா. பரந்த நெகிழ்ச்சியான ஒரு கலைத்திட்டத்தின் வழி மாணவர்களின் ஆளுமையை உறுதி செய்வதுடன் அவர்களுக்கான தொழிற் சந்தை வாய்ப்புக்களையும் அதிகரிக்கமுடியும் என்ற தெளிந்த சிந்தையுடன் 90களின் ஆரம்பத்திலேயே புதிய கலைத்திட்ட செயற்திட்டம் மேற்கொள்ளப்பட்டது. பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்குப் பின் உலக வங்கியும் ஏனைய நிபுணத்துவங்களும் எங்கள் கல்வியை கோபுரமாக்கும் நிதிக்கடன் உபயங்களும் சொல்ல வருவனவற்றினை கிழக்குப் பல்கலைக்கழக விஞ்ஞான பீடம் அன்றே நடைமுறைப் படுத்த ஆரம்பித்தமையிட்டு நாம் பெருமை கொள்ளாமல் இருக்க முடியாது.

ஆங்கில மொழிமூலமான வீஞ்ஞான பீடக் கல்வியின் வெற்றிக்குப் பின்னால் இருந்த பொருத்தமான திட்டமிடல் பற்றியும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். கிராமங்களிலிருந்து தெரிவாகும் பெரும்பாலான பிள்ளைகளின் மட்டுப்பாடான ஆங்கில அறிவுடன் ஆங்கில மொழி மூலமான பட்டக்கல்வி சாத்தியமாகுமா என்ற அச்சத்தினை "முடியும்" என்ற நம்பிக்கையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளுக்குத் தந்து அதற்கான ஏற்பாடுகளும் அழகாகவே வகுக்கப்பட்டன.

ஆங்கில மொழிப் போதனை விஞ்ஞான பீடாதிபதியின் கீழேயே ஒழுங்கமைக்கப்பட்டது. ஒவ்வொரு ஆங்கில வகுப்பும் விஞ்ஞான கலைத்திட்டத்தின் பகுதியாக அமையுமாறு திட்டமிடப்பட்டது. .மிகக் குறுகிய காலத்திற்குள்ளாகவே தன்னம்பிக்கையுடன் பிள்ளைகள் ஆங்கில மொழி மூலமாக சிறப்பாக தங்கள் கல்வியை மேற்கொள்ள முடிந்தது.

அக்காவின் தலைமைத்துவத்தின் கீழ் பல்வேறு நெருக்கடிகள் வசதியீனங்களின் மத்தியிலும் விஞ்ஞான மாணி வெளிவாரிப் பட்டப்படிப்பினை வழங்கிய கிழக்குப் பல்கலைக்கழகம் ஏனைய அனைத்துப் பல் கலைக்கழகங்களுக்கும் முன்னோடியானது. சமூகத்திற்கு இன்றியமையாத தொழில்வாய்ப்புக்களுக்கு உதவக்கூடிய பாட நெறிகளை வெளிவாரிப் பட்டப் படிப்பில் அறிமுகம் செய்ய இன்று மேற்கொள்ளப் படுகின்ற உலகவங்கி எத்தனங்களை அன்றே யாதர்த்தமாக்கிய கிழக்குப் பல்கலைக்கழக விஞ்ஞானபீட ஆசிரியர் சமூகத்தின் பணி காலத்திலான பெருந்தொண்டாகும். தரப்படுத்தல், இனவாரி அனுமதி என்ற மட்டுப்படுத்தல் களுக்குள் பல்கலைக்கழக அனுமதி மறுக்கப்பட்ட பல பிள்ளைகள் இதனால் பயன் பெற்றார்கள். இவர்களிற் கூடாக இவர்கள் சார்ந்த கிராமங்கள் தோறும் விஞ்ஞானக் கல்வி பரந்து வேர்விட முடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் பல்கலைக்கழகப் பணிகளுக்கு அப்பால் பல சமுதாய மேம்பாட்டுத் திட்டங்களில் ஆலோசகராகவும் விளங்கினார். இந்த வகையில் மொரட்டுவப் பல்கலைக் கழகத்தின் அழைப்பின் பெயரில் பொத்துவில் வரையி லான புகையிரதப் பாதை அமைப்பின் சாத்தியபாடு பற்றிய அறிக்கையிடல், மட்டக்களப்பு வாவியின் உயிர்பல்வகைமைக் காப்பு பற்றிய ஆய்வுத் திட்டங்கள் கிழக்குப் பிரதேசத்தின் இன உறவு மேம்பாடு தொடர்பான செயற்பாடுகள் ஆகியவற்றில் அவரது பங்கும் பணிகளும் கூடவே நிறைந்திருந்தன.

பல்கலைக்கழகம் கண்ட உயர்வுகள் அது அறிமுகம் செய்த புத்தாக்கங்கள் அனைத்திலும் உயிர் விசையாக இருந்த அக்கா பல்கலைக்கழக சமூகம் எதிர்கொண்ட நெருக்கடிகள், சவால்களின் போதும் எப்பொழுதுமே ஒரு தாயாக உடனிருந்தாள். பல்கலைக்கழக சமூகத்திற்கு மட்டுமன்றி பல்கலைக்கழகம் அமைந்த சூழலமைவின் மக்கள் அனைவரினதும் பெருமைக்குரிய தாயாக விளங்கினார். இந்தக் காலப்பகுதியில் சூழமைவின் நெருக்கடிகளுக்குள் அகதிகளாகி பல்கலைக்கழகத்தில் தஞ்சமடைந்த பல்கலைக்கழக சமூகத்தினர், பிரதேச மக்கள் ஆகியோரின் உயிர் காத்த பெருந்தாயாக அவர் விளங்கினார்.

பல்கலைக்கழகத்திலிருந்து ஓய்வுபெற்ற வேளை முன்னாள் அதிபரும் கிழக்குப் பல்கலைக்கழக பேரவை உறுப்பினரும் முன்னாள் பாரளுமன்ற உறுப்பினருமான பிறின்ஸ் காசிநாதன் (1999) எழுதிய பாராட்டு மடலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகுட வாசமாக இந்த "Great Mother" பிரதிமை நிறைந்திருந்தது.

A prominent Don of the Eastern University Prof. Mano Sabaratnam bade farewell to Batticaloa, after a commendable period of selfless service not merely in academia but in several fields of activity.

She initially served in the former University College in Batticaloa playing a major role in its development into the present day Eastern University.

Far from confining her services to the narrow ambit of this University, she assisted various voluntary services.

The Federation of NGOs accorded her a farewell, just before she left this District to go back to Jaffna.

The University Council nominated her for the position of Vice Chancellor but this fell through at a higher level.

She was a mother figure to all students, who went to her with their problems of a personal nature.

பிறின்ஸ் காசிநாதன் அவர்கள் குறிப்பிட்ட துணை வேந்தர் விவகாரம் பற்றி இந்த இடத்தில் குறிப்பிடாமல் இருக்கமுடியவில்லை. "இலங்கையின் முதல் பெண் துணைவேந்தர் என்ற பெருமையை கிழக்குப் பல்கலைக் கழகத்துப் பேராசிரியர் மனோ சபாரத்தினம் அவர்கள்" என்ற பத்திரிகைச் செய்திகளில் நாடெல்லாம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாமெல்லாம் இறுமார்ந்திருந்த வேளையில் சில சின்ன மனிதர்களின் பதவி ஆசையும் குறுகிய நோக்கும் பிரதேச வாத முகமூடியுடன் ஆடிய நாடகத்தில் கல்விச் சமூகமும் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் இந்நாள் வரையான இருப்பும் வெட்கித் தலைகுனியும் வரலாறு எழுதப்படும்.

எங்கள் மனங்களில் எல்லாம் ஒரு பெரும் மனவடுவாக எழுதப்பட்ட இந்த நிகழ்வுக்குப் பின்னாலும் அக்காவின் மனம் தளர்ந்ததில்லை. அநீதி இழைத்தவர்கள் மீதான கோபம் அன்பான மாணவர்களினதும் பல்கலைக்கழகக் கல்விச் செயற்பாடுகளிலும் எத்தகைய பாதிப்புப்களையும் ஏற்படுத்தக் கூடாது எனும் அக்காவின் பெருமனம் எல்லோருக்கும் வாய்ப்பதில்லை.

"கடமையில் கண்ணானாள் மனோ" என அக்காவைப் பாடிய இராஜேஸ்வரனின் கவிதை வரிகளைப் போல மீண்டும் வீஞ்ஞானபீடப் பணிகளுக்குள் அர்பணமாவாள். ஓய்வு பெறும் வரை விஞ்ஞான பீடாதிபதியாக தான் தொடங்கிய பணிகளை காத்து நிற்பாள். எவரெவரோ வந்து வந்து போனார்கள். ஆர்ப் பரித்தவர்கள் எல்லாம் ஓடி மறைந்தார்கள். அக்காவின் பல்கலைக்கழக பணிக்கால பிரியாவிடைப் பொழுதில் விஞ்ஞான பீடத்தின் ஆத்ம வாழ்த்தாக வழங்கப்பட்ட கவிதா வரிகளுக்குள் அவளது வாழ்வின் மேன்மைகளும் சாதனைகளும் அழகாகவே துலங்கிடும்.

எண்பத் தொன்றில் பல்கலைக் கல்லூரி
முதல் விஞ்ஞான பீடாதிபதியாகி
கண்ணெனப் போற்றியதை வளர்ப்பதிலே கண்ணாகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருமங்க ளாற்றியவுன் சேவைதனை மறப்போமா?
விண்ணாதி விண்ணீயென விலங்கியல் விரிவுரைகள்
ஆற்றி நீ விளங்கியதை அகிலம் தான் மறக்குமா?
கொண்ட கொள்கையை நடைமுறைப்படுத்திடும்
கோதையாம் மனோ அம்மா வாழிநீ பல்லாண்டு!
சுண்டிக்குளி மகளிர் கல்லூரி தன்னில்
சுந்தரிநீ கற்றே கொழும்புப் பல்கலை விஞ்ஞானப்
பண்டிதை யாகிய எடின்பரோவில் கலாநிதிப்
பட்டமதை பெற்ற எங்கள் "மனோ" அம்மணியே!
எண்ணித் துணிந்து கருமங் களாற்றுமுந்தன்
ஆளுமைக்கு நிகர் அகிலத்தில் எவருமிலர்
கண்ணியங் காத்த நீ பண்ணிய புண்ணியங்கள்
காலத்தாலழியா (எவர்) ஒழிந்தாலும் ஒழியா!
தொண்ணூறில் வல்லூறுக் கூட்டமது வளாகத்தை
வளைத்தே ஊழியர் மாணவக் குஞ்சுகளை
கொன்றிடத் தூக்கிச் சென்றிட்ட வேளையில்
கொக்கரித்தே வல்லூறுக் கூட்டமொடு சமராடி
என்னையும் சேர்த்துக் கொண்டு போங்கள்
எனக்கூறி மதிலேறிக் குதித்தெமைக் காத்த வீரப்
பெண்ணெனப் பேர்பெற்ற மனோ அம்மணியே
பெருவாழ்வு பெற்றே நீ வாழிய பல்லாண்டு!

கல்வியே வாழ்க்கை யாய்க் கொண்டு இக்காசினியில்
கடமை கண்ணியம் க்ாத்து எங்கள் கிழக்குப்
பல்கலைக் கழக விஞ்ஞான பீட நாயகியாய்
பல்லாண்டுகள் பணிசெய்த கலைச்
செல்வியாம் மனோசபாரத்தினத் தாளுந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவைதனைப் போற்றிப் பிரியாவிடை யளித்தே
எல்லாப் பணியாளரும் இணைந்து நின்றே
எற்றமொடு நீவாழ வாழ்த்துக்கள் தந்தார்
வாழிய நீடூழியென வாழ்த்துகின்றோம்.

விஞ்ஞானபீடத்தினர், 06.03.1999

எந்த விதமான சலனமும் இல்லாமல் ஒரு தவமாகவே கிழங்கிலங்கையின் சமூக மேம்பாட்டுக்கான அக்காவின் பணி தொடர்ந்தது. தன்னுடைய நிர்வாகப் பணிக்கள், வகுப்பறை கற்பித்தல் பணிகளுக்கு அப்பால் நூலாக்கத் துறையிலும் ஆய்விலும் அக்கா கொண்டிருந்த ஆர்வம் அவரை ஒரு முழுமையான புலமையாளராக ஆக்கும். அவரது ஆய்வுக் கட்டுரைகள் பல சர்வதேச ஆய்வேடு களில் வெளியாகியுள்ளன. இவற்றினைவிட சுவாமி விபுலானந்தரின் கல்வியல் தரிசனம், உயிர் பல்வகைமை போன்ற நூல்களும் திறந்த பல்கலைக்கழக மாணவர்களுக் கான Developmental Biology, Insect Texonomy and Physiology, h;uman Biology ஆகிய நூல்களும் இன்னமும் நூல்வடிவம் பெறாத ஏனைய ஆக்கங்களின் வழியாகவும் நூலாக்கத் துறையில் தன்னை அக்கா பதித்துள்ளார்.

தமிழை அறிவியல் மொழியாக்கும் அக்காவின் இலட்சியத்தின் பயனாய் உயிர்ப்பல்வகைமை (1998) என்ற நூல் தமிழுக்காகும்.

பல்கலைக்கழக சேவைக் காலத்திலேயே சமுதாய மேம்பாடு சார்ந்த அமைப்புகளோடு இணைந்து செயல்பட்டு வந்த அக்கா தன் பல்கலைக்கழக பணி ஓய்விற்குப் பின்னால் "மன்று" நிறுவனத்தின் நிர்வாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயக்குநராகி கிழக்குப் பிரதேச மக்களின் வாழ்வாதாரம், சுற்றுச் சூழல் பாதுகாப்பு சார்ந்து ஆற்றிய பணிகள் அக்காவின் மற்றொரு அவதார பணிகளாக போற்றப்ப டும். வறிய நலிந்த மக்களின் வாழ்வாதார எழுச்சிக்கான திட்டங்களை மன்று நிறுவனத்தின் மூலக கர்த்தாக்களுள் ஒருவரான திரு மனோ இராஜசிங்கம் அவர்களுடன் இணைந்து வெற்றி காணச் செய்தார்.

மன்று நிறுவனத்ததில் அக்கா ஆற்றிய மேலான பணிகளை அன்றைய அஞ்சலி உரைகளிடை சாந்தி கண் கலங்க எடுத்துரைப்பார்.

எனது கணவர் மனோ இராஜசிங்கம் அவர்கள் இத் திட்ட முகாமைத்துவத்திலும் நிர்வாக நடைமுறைகளிலும் மிகவும் நெகிழ்ச்சித் தன்மை உடையவர். பேராசிரியர் மனோ அவர்கள் தான் மன்று நிர்வாகத்தினைக் கட்டுக் கோப்பானதாக மாற்றியமைத்து இப்பாரிய திட்டங்களை யெல்லாம் பயனுறுதியான முறையில் செயற்படுத்து வதற்கு முன்னின்று உழைத்தவர். விஞ்ஞானத்தில் அவருக்கு இருந்த பாண்டித்யமும் இத்திட்டங்கள் இன்னமும் விஞ்ஞான பூர்வமாக முன்னேற்றகரமாகச் செயற்படுத்தப்படுவதற்கு உறுதுணையாயிற்று. அது மட்டுமன்றி, கிழக்குப் பல்கலைக்கழகத்திலிருந்தும் வேறு பல்கலைக்கழகத்தி லிருந்தும் பல கல்விமான்களை மன்று நிறுவனத்துக்கு அறிமுகம் செய்துவைத்து அதன் திட்டங் களை இன்னமும் விரிவடையச் செய்தார். வேலையை மட்டும் குறி வைத்தச் செயற்படுபவராக இராமல் வேலை செய்பவர்களினதும் நல்வாழ்வினைப் பற்றி அக்கறைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுபவராக இருந்த தன்மையினால் மன்று நிறுவனத்தின் பணியாளர்கள் யாவரும் ஓர் குடும்பம் போன்று ஒட்டுறவாக இருந்தனர்.

தன் வாழ்நாள் காலத்தில் பேராசிரியர் மனோ அவர்கள் தமக்கென ஒரு சிறுநிலத் துண்டையும் வாங்கியதாக நான் அறியவில்லை. ஆனால் அவரது ஊக்குவிப்பில் கிரான் குளத்தில் கிட்டத்தட்ட 5 ஏக்கர் நிலத்தில் ஒரு பண்ணை உருவாக வழிவகுத்தார்.

பேராசிரியர் மனோ சபாரட்ணம் அவர்கள் ஓர் சிறந்த கல்விமானாக, சிறந்த நிர்வாகியாக, சக மனிதர்கள் அனைவரின் மீதும் அபிமானமும் அன்பும் கொண்ட ஒரு இதயமாக வாழ்ந்தவர். இத்தனை இயல்புகளும் கூடிய மனிதர்களை எமது வாழ்க்கையில் சந்திப்பது மிக அபூர்வமாகும்.

இக்காலப்பகுதியில் அரசார்பற்ற நிறுவனங்களின் இணையம் அமைப்பின் தலைவியாக அவர் ஆற்றிய பணிகளின் மேன்மையை 2010 இல் இணையம் அவருக்களித்த பிரியாவிடை கவிதை வரிகள் போற்றி நிற்கும்.

சென்று வா தாயே சென்று வா
தேனாடு போற்ற முப்பது ஆண்டுகள்
வனவளம் காக்க கண் வளராது
கடிதாய் உழைத்தாய்
இன்று பனை நாடு காண உன்புலம் திரும்புகின்றாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தாறுமூலையில் வந்து ஆறுவோர் பலர்.
அறுப்போர் பலப்பலர்
ஆனால் நீயோ ஆறவுமில்லை அயரவுமில்லை
கிழக்கின் பல்கலைக்கழகத்தை கைவிட்டு சுகபோகம்
தேடி ஓடவுமில்லை ஒழியவுமில்லை
ஒழுக்கமிகு கழகமாய் உயர்த்த நின்றாய்
நிமிர்ந்து முறத்தால் புலியை அறைந்து ஓட்டிய
அக்கால தமிழிச்சி போல்
தொண்ணூறுகளில்
அறத்தால் அதிரவைத்தாய் இக்கால சிங்கத்தை
பன்னூறு பாமர உயிர்கள் பலியாகி மறைய
இன்னும் பலப் பலநூறுகளை காத்து நின்றாய்
தனியொரு காவியமாய்
மட்டுமண் மறவாது செய்நன்றி ஒருக்காலும்

அவலமிகு தொண்ணூறுகளில் ஒலித்தாய்
உறுதியுடன் தொலை நோக்கோடு வளர்ந்தாய்
தொண்டு நிறுவன சேவைகளை.
ஆகினாய் முப்பெருந் தலைவியாய் மட்டு இணையத்தின்.
வந்தாரை வாழவைக்கும் மட்டு மண்ணின்
வனவளம் மண்வளம் வாவிவளம் வாழவைக்க
நட்டாய் சோலைகள் பல
சூறாவளிக்கு தடை அரண்களாய் அவை சுனாமியிலும்
காத்தன கடல் காவிச் சென்ற பல உயிரை
கண்ணாக்கள் இன்று வாவியில் காண்கின்றோம்
என்றால்
அது உன்னாலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணில் நீருடன்
தாயகம் திரும்பும் வேளை
தானைத் தலைவியே போய் வா என்று வாழ்த்து கின்றோம்
சோகமாய்
இனி இங்கு வனவளம் காக்க யார்?

(இணையம், 5 ஜூலை 2010)

அக்காவின் பல்கலைக்கழகப் பணியாகட்டும், சமுதாய மேம்பாட்டுப் பணிகளாகட்டும் அனைத்திற் குள்ளும் வாழ்ந்த அவரது அனுபவங்கள் அனைவருக்கும் வழிகாட்டும் பாடங்கள் ஆகின. அக்காவுக்குள் நிறைந்தி ருந்த புலமையும் சிந்தனா வீச்சுக்களும் ஆங்காங்கே அவளது எழுத்துக்களிடையேயும் பகிரங்க மக்கள் தொடர்பாடல் அரங்குகள் இடையேயும் தெளிவாகவே ஒலித்திருந்தன. இந்த எழுத்துக்கள் சொல்லாடல்கள் அனைத்தையும் ஒரு பெரும் தொகுப்பாக வடிவமைத்த லின் இன்றியமையாமை உணரப்பட்ட போதும் அவரது வாழ்நாள் காலத்தில் அதனை நிறைவேற்ற காலம் இடம் தரவில்லை. அத்தகையதொரு பெரும் வெளியீட்டின் முன்னோடியாக அக்காவின் கல்வி சிந்தனையை சமுதாய மேம்பாடு பற்றிய கருத்தியலை, பண்பாட்டு உணர் திறனை வெளிப்படுத்தும் ஆக்கங்களிலிருந்து வகைமாதிரி யாக சில கருத்துக்கள் இங்கே பதிவு பெறும்.

※ கடந்த காலங்களில் பல்கலைக்கழங்கள் தனித் தனியாக தங்கள் தங்கள் தரநிர்ணயங்களைத் தீர் மானித்தன. இப்பொழுது அதிகரித்த பல்கலைக்கழக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணிக்கைகளிடை அனைத்து பட்டதாரிகளினதும் தரத்தினை உறுதி செய்யும் தேவை அதிகரித்துள்ளது. எனினும் இதனை செய்வதற்கு முன்னால் மட்டுப்பாடன வளங்களுடன் போராடிக் கொண்டிருக்கும் புதிய பல்கலைக்கழங்களின் தேவைகளை மதிப்பிட்டு அவற்றினை நிறைவு செய்வது முன் நிபந்தனையாகும். அல்லாத போது இன்றைய முயற்சிகள் யாவும் வெறும் கண்துடைப்பாகிவிடும் -If every thing remaining equal then quality assurance will become usefull and meaningful, Unitil then it will be just an eye wash என தெளிவாகவே ஒலித்தது அக்காவின் குரல்.

❋விஞ்ஞான கல்வி என்பது வெறும் ஏட்டுச் சுரைக்கா யாக அமைவது அர்த்தமற்றது. ஆய்வுகூட அனுபவம் இல்லாத விஞ்ஞானக் கல்வி வெறும் மனன பாடமாக அமைந்து மாணவர்களிடத்து எத்தகைய திறன்களும் விருத்தியடையாமல் போகவே வழி செய்யும். இன்றைய பாடசாலைக் கல்வியில் ஆய்வுகூட பயிற்சிகான இடம் முற்றாகவே புறக்கணிக்கப்பட்டுள்ளமை கவனத்திற் குரியது. பல மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு வந்த பின்னரே முதல் முதலாக ஒரு பரிசோதனைக் குழாயைக் கூட காண்பதான அவலங்கள் இனியும் தொடர முடியாது. பாடசாலைகளும் ஆசிரியர்களும் கல்வியாளர்களும் பிள்ளைகளின் அனுபவ அறிவிற்கான வழிவகைகளை தாமதம் இன்றி செய்து கொடுக்க வேண்டும். இசை, நடனம் ஆகியவற்றுடன் மனையியலுக்கு கூட பயிற்சித் தேர்வுகள் உள்ள போது விஞ்ஞான பாடங்களுக்கு மட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது கவனம் பெறாத நிலையை எவ்வாறு விளங்கிக் கொள்வது.

இன்றைய கல்வி முறைமை பற்றிய அக்காவின் விமர்சன ரீதியான கருத்துக்கள் அவர் கலந்து கொள்ளும் கல்வி சார் அவைகளில் மட்டுமன்றி துறைசார்ந்தவர் களுடனான தனிப்பட்ட உரையாடல்களிடையேயும் கூட இடம்பெறும். தனக்குக் கிடைக்கின்ற பொது வைபவங் களினூடாகவும் இன்றைய கலைத்திட்ட நடைமுறை சார்ந்த எடுத்துரைப்புக்களை செய்ய அக்கா தவறுவ தில்லை.

※ வடக்கு-கிழக்கு மாகாணங்களில் உள்ள பாடசாலை களிலும் ஏனைய பின்தங்கியப் பிரதேசப் பாடசாலை களிலும் கரும்பலகையும் வெண் கட்டியுமே பிரதான கற்பித்தல் உபகரணங்களாக உள்ளன. ஆனால் கொழும்பு நகரில் கணனிகள் மற்றும் நவீன சாதனங்களின் துணையுடன் மாணவர்கள் கல்வி கற்று வருகிறார்கள். இங்கிருந்து புலமை பரிசில் பெற்று அமெரிக்கா, லண்டன் செல்லும் அதிகாரிகள் அங்குள்ள கல்வித் திட்டங்களை பாட விதானங்களை இங்குள்ள நிலமைகளைக் கருத்தில் கொள்ளாது அப்படியே அமுல்படுத்த முனைகிறார்கள்.

சரியாக ஐம்பது மாணவர்கள் கொண்ட வகுப்பறை யில் கற்பித்தலை மேற்கொள்ளவும் புதிய கல்வித்திட்டம் சார்ந்த கணிப்பீடுகளை மேற்கொள்ளவும் ஆசிரியர்கள் நிர்பந்திக்கப்படுகிறார்கள். ஒரு வகுப்பிலுள்ள மாணவர் களின் எண்ணிக்கை 20 அல்லது 25க்கும் அதிகமாகிற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுது எதிர்பார்க்கப்படுகின்ற வெற்றிகரமான விளைவு கள் கிடைக்கப்போவதில்லை.

ஒலி, ஒளி எலக்ரோனிக் சாதனங்கள் இன்று இளஞ்சிறார்களின் பொழுதை விழுங்கி வருகின்றமையும் எம் கவனத்திற்குரியதாகும். இதனால் வாசிப்புப் பழக்கம் அருகிவிட்டது. பெற்றோர்களும் பிள்ளைகளை வாசிக்கத் தூண்டுவது குறைவு. தொலைக்காட்சிகளும் அறிவுசாரா விடயங்களையே பெரும்பாலும் ஒளிபரப்பாக்கி பிள்ளை களின் நேரத்தைப் பாழடித்து வருகின்றன. இந்நிலையில் எலக்ரோனிக் தொடர்பு சாதனங்கள் தொடர்பான விழிப்புணர்ச்சி ஏற்படுத்தப்பட வேண்டும்.

இன்றைய மொழியறிவு போதாமை பற்றியும் கவனிக்க வேண்டும். இன்று உயர் பதவிகளில் உள்ள கணிசமானவர்களால் ஆங்கில மொழி அறிவு மட்டுமன்றி தமிழில் கூட சரியாக எழுத முடியாதுள்ளது.

பாடசாலைகளில் ஆங்கிலம் போதிக்கும் ஆசிரியர் கள் தகுந்த பயிற்சி பெற்றவர்களாக இருக்க வேண்டும் (வீரகேசரி 29.05.2001).

இன்றைய உலகமயமாக்க அலைகளிடையே சுய பண்பாட்டின் மேன்மைகளை மறந்தும் நுகர்வுப் பண்பாட்டின் அங்கலாய்ப்புகளுக்குள் விழுந்தும் எம்மை நாமே நோயாளிகளாகவும் கடனாளிகளாகவும் ஆக்கு கின்ற அவலம் பற்றி அக்காவின் கருத்துக்கள் சமூகப் பொறுப்புணர்வினையும் சுதேச அறிவின் மேல் அவர் கொண்ட ஈடுபாட்டினையும் புலப்படுத்தி நிற்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய எங்களின் உணவு, உடை மற்றும் பழக்க வழக்கள் பற்றிய அக்காவின் தெளிவான விமர்சனமும் முன்வைப்புக்களும் அக்காவை பிரம ஆசிரியராகக் கொண்டு மன்று நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட சூழல் சுடர் சஞ்சிகையில் தெளிவாகவே பதிவு பெறக் காணலாம்.

※நமது மூதாதையர் காலையில் எழுந்ததும் குளிர்ந்த நீரில் நீராடி கடவுள் வழிபாடு செய்து பழஞ் சோற்றில் மோர் விட்டுப் பருகுவார்கள். இன்றைய நிலவரம் என்ன? படுக்கையில் இருந்தவாறே வாய்தானும் கழுவாமல் சுடச்சுட கோப்பியையோ, தேநீரையோ வர வழைத்துக் குடிக்கின்றார்கள் இப்பானங்கள் நம் நாட்டுக்கு வெள்ளை யர் ஆட்சியின் போதுதான் நம்மவரிடையே திணிக்கப் பட்டவையாகும். இவ்விரு பானங்களிலும் நம் உடல் நலத்துக்கு கேடு விளைவிக்கும் எத்தனை நஞ்சுப் பொருட்கள் இருக்கின்றன? இது நம்மில் பலருக்கு தெரியாது.

நாம் வாழும் பிரதேசத்திற்கு ஏற்றவாறு நமது உணவு, உடை மற்றும் பழக்கவழக்கங்கள் அமைய வேண்டும். வெப்பம் கூடிய பிரதேசங்களில் வாழும் நாம் பருத்தி ஆடை அணிவதே உகந்தது. ஆனால் இன்றைய நிலவரம் என்ன? நைலோன், சிந்தட்டிக் போன்ற நவீன மோஸ்த்தர் ஆடைகளை விரும்பி அணிகின்றோம். வளர்ந்தவர்கள் மாத்திரம் அல்ல பிறந்த பச்சிளம் குழந்தைகளுக்கும் இந்த செயற்கைத் துணி ஆடைகளே அணிவிக்கப்படுகின்றது. இதனால் வியர்வை வெளியேறுவது தடைப்படுவதால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் அவஸ்த்தைப்படுகின்றோம். சனசந்தடியிலும் போக்கு வரத்திலும் இந்த மோஸ்தர் உடை அணிந்த குழந்தைப் பிள்ளைகள் வீரிட்டு அழுவதை நாளாந்தம் காண் கின்றோம்.

இன்று உலகம் சுருங்கி வருகின்றது. போக்குவரத்து, தகவல் தொடர்புகள், மக்கள் வெளி நாடுகளுக்கு புலம் பெயர்தல் உட்பட வேலை வாய்ப்புக்களுக்காக வெளி நாடுகளுக்கு சென்று வருதல் முதலானவற்றால் நம் நாடு உலக அளவில் வெளிநாடுகளுடன் நெருங்கி வந்து கொண்டிருக்கின்றது. இதனால் நம் உணவுப் பழக்க வழக்கங்களிலும் உடை அலங்காரங்களிலும் பெருமளவு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஆயினும் மாற்றங்கள் நமது சுதேசியச் சூழலுக்கும் சுகநலனுக்கும் உகந்தனவாக அமைவது அவசியமாகும்.

மேலை மோகத்தில் நீர் அருந்துவதற்குப் பதிலாக கொக்கக்கோலா, பெப்ஸிகோலா பானங்களைப் பெற்றோர்கள் மாத்திரமன்றி பிள்ளைகளும் பருகுவது வழக்கமாகியுள்ளது. இது எந்தளவுக்கு கேடு விளைவிக்கும் என்பதை அறிந்தோ அறியாமலோ செய்கின்றார்கள்.

நமது குத்தரிசி சோற்றுக்கும் கீரை மற்றும் இலை வகைகள் நம் ஊர் மரக்கறிகளைக் கொண்டு வகை வகையாகச் சமைத்து ருசி பசியாக உண்ணுவதற்கு மேலே காட்டிய உணவு வகைகள் ஈடாகுமா? (புரட்டாதி **1999**, சுடர் **61: 18-19**).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

※ இயந்திர வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கும் இக்கால கட்டத்தில் தாய்மாரின் பங்களிப்பு ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஏன் ஒவ்வொரு நாட்டிற்கும் மிகவும் அத்தியாவசியமானது எனவே பிள்ளைகளினதும் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு ஊட்டச் சத்துள்ள உணவை காலை மதிய, இரவு ஆகாரங்களாக கொடுப் பதனால் நோயற்ற திடகாத்திரமான வாழ்க்கையைப் பேணலாம் இதை விட உடற்பயிற்சி, நித்திரை போன்ற வையும் சுகவாழ்விற்கு அத்தியாவசியவை. இதன் மூலம் வேலையின் பழுவை அறியாது உற்சாகமாக இருப்பதை உணரலாம் (தை-மாசி 1999, சுடர் 58: 23).

சுகாதாரத்தை பேணுதலில் எங்கள் தேசத்து நிலைபற்றிய அக்காவின் கவனிப்பும் கவலையும் அவரது எழுத்துக்களில் எல்லாம் ஆழ பதிவு பெறக் காணலாம். குறிப்பாக நகர்புறங்க உணவகங்கள் ஆஸ்பத்திரிகளின் மோசமான சுகாதார நிலமைகளுக்கு யார் பொறுப்பாளி என தார்மீகமான கோபத்துடன் வினா எழுப்புவார்.

※ வீதிகளின் இரு மருங்கிலும் குப்பை கூழங்கள் குவிந்திருக்க காணலாம் இத்தகு காரணம் என்ன? மக்களுக்கு சுகாதார அறிவில்லையா? அல்லது பொது, இடங்கள் என்ற அலட்சியமா? ஆனால் கல்வி வளர்ச்சி யடைந்துள்ள நாடொன்றில் சுகாதார அறிவில்லை என்ற கூறமுடியாது. ஆகவே இந்த சுற்றாடல் அசுத்தமாவதற்கு காரணம் நமது நாட்டு மக்கள் அதுவும் பட்டணத்தில் வாழ்வோர் மற்றவர்களைப் பற்றியும் பொது இடங்கள் பற்றியும் அலட்சியமாக இருப்பதே காரணமெனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைகளிலும் மற்றும் கல்விக் கூடங்களிலும் சுகாதாரக் கல்வி போதிக்கப்பட்டுக் கொண்டிருப்பினும் அது ஏட்டுக் கல்வியாகவே விளங்குகின்றது. கற்றவற்றை நடைமுறைக்கு கொண்டுவருவதாக இல்லை. கற்பிக்கப் படும் கல்வியானது பரீட்சைக்கு மாத்திரமின்றி நடை முறை வாழ்க்கைக்கும் பயன்படுகின்றதோர் நிலை ஏற்பட வேண்டும். அப்போதுதான் கல்விக்காக செலவிடப்படும் பணத்தின் அறுவடையும் முழு நாடும் பெறமுடியும் (ஆசிரியர் தலையங்கம் - ஆனி 1998, சுடர் 58: 3).

இயற்கை முறையிலான விவசாயம் தொடர்பான அக்காவின் ஆர்வம் மிக இளவயதிலிருந்தே சுற்றுச் சூழல் மீதான நேசிப்பின் வழியாக அவருக்குள் வேர் விட்ட ஒன்றாகும். நிலைபேறான மேம்பாடு என இன்று முதன்மை பெறும் கருத்தியலுக்கு உரம் சேர்ப்பதாகவும் அக்கருத்தாக்கத்தினை நடைமுறையில் நிலைநாட்டுவ தாகவும் அக்காவின் எழுத்துக்களும் செயற்பாடும் அமைந்திருந்தன.

உலகளாவிய ரீதியில் முன்னோர்கள் இயற்கை விவசாய முறையையே காலம் காலமாகக் கைக்கொண்டு வந்தனர். ஆனால் 1940 களில் சனத்தொகைப் பெருக்கத்து டன் உணவு உற்பத்தியின் அதிகரிப்பு மிகவும் தேவைப் பட்டது இதனை பூர்த்தி செய்யும் நோக்கத்தடன் பல இரசாயன உரங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இதற்கு மேலாகவும் உணவுத் தேவையேற்பட அதியுயர் உற்பத்தி யுடைய வீரிய விதைகளை பாவித்து ஓரினப்பயிர்ச் செய்கை மற்றும் இரண்டு மூன்று போக தானியச் செய்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இதன் பலா பலனாக மண்வளம், நீர்வளம் மாசுபடுத்தப்பட்டன. இதற்கு மேலாக பல பீடையினங்கள் பல்கிப் பெருகும் வாய்ப்பு ஏற்பட்டது. இவற்றை அழிப்பதற்காக பல இரசாயனப் பீடைகொல்லிகள் அறிமுகம் செய்யப்பட்டன இவை யெல்லாம் சேர்த்து நமது சுற்றுச் சூழலை மாசடையச் செய்தன. தற்போதும் செய்கின்றன. இந்தத் தாக்கங்களி லிருந்து நமது சூழலை, மக்களை, பிற உயிரினங்களைக் காக்க வேண்டிய அவசியமேற்பட்டது. இரசாயனமுறை விவசாயத்துக்கு மாற்றீடாக மீண்டும் அறிமுகம் செய்யப் பட்டது தான் இந்த இயற்கை விவசாய முறை (ஆவணி ***1999***, சுடர் ***60: 7).***

※ நமது நாட்டைப் பொறுத்தமட்டில் கிராமங்களில் உள்ள மக்கள் தமக்கு வேண்டிய எரிபொருளை தங்களது வளவிலிருந்தோ அன்றி சுற்றுப்புறச் சூழலில் இருந்தோ பெறுகின்றனர். இவ்விடத்தில் இந்நிலை தொடர்ந்தும் பின்பற்றக் கூடியது தானா? என்ற கேள்வி எழுகின்றது. உண்மையைக் கூறுவதானால் எதிர்காலத்தில் எரிபொருள் தேவைக்காக கஷ்டப்படப் போவது வறிய கிராமப்புற மக்களேயாகும்.

நான் இக்கட்டுரையை எழுதுவதற்கு முக்கிய காரணமாக அமைந்தது மட்டக்களப்பு- திருகோணமலை பாதையில் நித்தம் காணும் காட்சிதான். ஆமாம், உச்சிவெயில் என்றும் பாராமல் சைக்கிள்களில் கூட்டம் கூட்டமாக விறகுக்கட்டுக்களை ஏற்றிவரும் அந்த பரிதாபமான காட்சி இன்றும் கண்முன்னே நிற்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் படும் கஷ்டத்தைப் பாராது முழத்துக்கு ஒரு சோதனைச்சாவடி வேறு.

நான் கொழும்பில் இருந்து மட்டக்களப்பிற்கு வந்த பின்புதான், விறகிற்காக மக்கள் படும் அவஸ்தையும் புரிந்தது. மேலே கண்ட சம்பவம் எனது இளவயது அனுபவங்களை மீளக்கொண்டு வரவும் உதவியது என்றே கூறவேண்டும். நான் சிறுமியாக இருந்தபொழுது நல்லூரில் உள்ள எமது பரம்பரை வீட்டிலேயே வாழ்ந் தேன். எங்களது வீட்டைச் சுற்றியுள்ள பெரிய வளவின் முன்புறமாக அழகிய பூந்தோட்டமும் வேலியோரப் பயிர்களாக, பூவரசு, கிழுவை, முள்முருங்கை, கிளசறியா என்பனவும், பின்பக்கமாக வாழை, மா, பலா, வேம்பு, புளி, முல்லை, தேக்கு, நாவல், விளா, தென்னை, பனை, யம்பு, மாதுளை என்று விதம் விதமாக அடர்த்தியாக வளர்ந்த மரங்களும் இருந்தன.

"நான் சுகமாக வாழ்கிறேன் அதேபோன்று நீயும் சுகமாக வாழ வேண்டும் என்பதற்காகத்தான் இந்த மரங்களை நாட்டுகிறேன்" என்பர் மாமி.

காடுகள் வளர்ப்பதற்கு ஊக்கப்படுத்த வேண்டிய காலகட்டத்தில் வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் பாது காப்பு என்ற போர்வையில் பல மரங்கள் வெட்டப் படுகின்றன. ஆனால் வெட்டிய மரங்களும் மாயமாக மறைகின்றன இதை தடுப்பதற்கு வழிவகைகள் இன்றி தத்தளிக்கின்றோம். வடக்கில் மரங்களை வெட்டினால் தெற்கிலும் அதன் தாக்கம் எற்படும் என்பதை அனைவரும் உணரவேண்டும் (ஆவணி 1999, சுடர் 60: 12-3).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களுக்கெல்லாம் ஆதர்சமான ஆளுமையாக அக்கா விளங்கியது போல அக்காவைக் கவர்ந்த, அவரிடத்து ஆழ்ந்த தாக்கங்களைச் செலுத்திய பதிவுகளும் குறிப்பிடத்தக்கன. இந்தவகையில் சுவாமி விபுலானந்தர் மீது அக்கா கொண்டிருந்த ஆழ்ந்த மதிப்பும் ஈடுபாடும் 'சுவாமி விபுலானந்தரின் கல்வியில் தரிசனம்' என்ற தலைப்பில் மட்டக்களப்பில் அவர் ஆற்றிய நினைவுப் பேருரையில் துலங்கிடும்.

அறிவியல் கல்வியானது உயரிய சமூக விழுமியங்களை பிள்ளைகளிடத்து விதைப்பதற்கானது என்ற விழுமியக் கல்வி சார்ந்த கருத்தியலை சுவாமி விபுலானந்தரின் உயிரியல் கல்வி பற்றிய கூற்றினூடாக அக்கா வெளிப்படுத்திய விதம் சிறப்பானது.

> "அன்பின் வழியது உயிர் நிலை" எனும் பொய்யா மொழியின் வழி எல்லா உயிரும் அன்பினால் நிலைபெறுவன; அன்பினால் வளர்ச்சி பெறுவன; தாவர உயிர்கள் மீது அன்பு செலுத்தினால் அது செவ்விதின் வளர்ந்து மலர், கனி முதலிய பயனைத் தரும். இவ்வுண்மையை இளையவர்களுக்கு அறிவுறுத்துவது உயிர் நூற்கல்வியின் முதல் படியாகும்.

எனும் அடிகளாரின் சிந்தனை வீச்சில் மனித விழுமியங்களுக்கான விஞ்ஞான கல்வி பற்றிய கருத் தாக்கம் அழகாக வெளிப்படுவதாக அடிகளார் பற்றிய தனது உரையில் அடிக்கோடிடுவார் அக்கா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் பண்பாடு கண்ட உயர் தனி ஆளுமை சுவாமி விபுலானந்தர் கலைஞராக, சிந்தனையாளராக, செயல் வீராக எங்கள் வரலாற்றில் அவர் பெறும் இடம் உன்னதமானது. காலத்தின் கண்ணாடியாக அன்றி காலத்தையே மாற்றும் முன்னோடியாக உயர்ந்தது அவர் வாழ்வு.

வெறும் நினைவுப் போற்றுதல் என்பதற்கு மேலாக இன்றைய பண்பாட்டு விழிப்புணர்வுக்கு மேலும் வலுவும் அர்த்தமும் தருவதாக அவரின் கல்விச் சிந்தனைகள் விளங்குகின்றன. இன்றைய எமது கல்விப் பிரச்சினைகள் பலவற்றிக்குமான வழி காட்டல்களை சிந்தனைப் பொறிகளை செயல் விளக்கங்களை விபுலானந்த அடிகளாரின் வாழ்வும் பணியும் எமக்கு தெளிவாகச் சொல்லும்.

என்ற அறிமுகத்துடன் அமைந்த இந் நினைவுப் பேருரை முழுமையும் விபுலானந்தரின் கல்விச் சிந்தனை களை எமது இன்றைய சூழமைவுக்குப் பொருத்தமான முறையில் அவரது உரை விளக்கி நிற்கும்.

சுவாமி விபுலானந்தரின் கல்வி வாழ்வினால் ஈர்க்கப் பட்டது போலவே சம காலத்து எங்கள் கல்வி உலகின் உயர்வுக்கான பங்காளிகள் அனைவரும் அக்காவின் போற்றுதலுக்கு உட்பட்டார்கள். எங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கல்வியியல் பேராசிரியர் சந்திர சேகரம் அவர்கள் போரின் கொடுமுகத்தில் அகால மரணமடைந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளை அவர் நினைவுகள் அக்காவின் பதிவு களாகும்.

மகனென்றும், மகளென்றும் மாணவர்களையும் சக ஆசிரியர்களையும் உள்ளன்போடு அழைத்து அறிவூட்டி நின்ற பேராசான் சந்திரசேகரம். கொழும்பு பல்கலைக் கழகத்தில் சக ஆசிரியராக அவரோடு பழகிய கால நினைவு களும் பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்குச் செல்கின்ற வேளைகளில் பழகக் கிடைத்த நாட்களின் நினைவுகளும் பெரிதும் உயர்வானவை. எங்கள் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் இந்து மாணவர் களின் முதல் சஞ்சிகையான இந்துநதி இதழுக்கான கட்டுரை ஒன்றினை வேண்டிய பொழுது விபுலானந்தத் தத்துவம் என்ற தலைப்பில் எழுதிய ஆய்வுக்கட்டுரையின் மை காய முன்னரே அவரை இழந்து நிற்கின்றோம் (வீரகேசரி வாரமலர் *03.01.1988).*

இவ்வாறே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக உயர் பணி ஆற்றிய பேராசிரியர் துரைராஜா அவர்கள் பற்றிய நினைவுப் பதிவுகளிடை யேயும் பேராசிரியர் மீது அக்கா கொண்டிருந்த மதிப்பும் அதற்கு மேலாக எங்கள் சமூகத்து உயர்கல்வியில் அவர் கொண்டிருந்த அயராத ஈடுபாடும் வெளிப்படும்.

உலகப் புகழ்பெற்ற பொறியியல் ஞானி. அவர் விரும்பியிருந்தால் ஆடம்பர வசதி வாய்ப்புகளுடன் வாழ்ந்திருக்க முடியும். சுகபோக வாழ்வையெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறந்து தன் சுதேசிய கடமையை உணர்ந்து உழைத்தது அவர் உயர்ந்த உள்ளம். திசையறியாது தவிக்கும் இன்றைய எங்கள் இடர் நிலையில் துரையின் இழப்பு பெரிதும் உணரப்படுகின்றது. தனிப்பட்ட பதவி நலன்களிலேயே கண்ணாக இருக்கும் இழி நிலையை ஒழித்து சமூகத்தின் கல்வி எந்த நிலையிலும் அழியாது காக்கும் பணியில் உயிர்ப்புடன் செயற்படுவோம். அதுவே எங்கள் துரைக்கு நாம் தரக்கூடிய உயர்ந்த அஞ்சலியாகும் (தினக்குரல் *11.06.1997*).

கிழக்குப் பல்கலைக்கழகத்திலிருந்து ஓய்வு பெற்ற பின்னரும் அக்காவின் நினைவெல்லாம் பல்கலைக் கழகத்தின் மேம்பாடு பற்றியதாகவே இருந்தது. குறிப்பாக பல்வேறு சவால்களின் மத்தியில் வளர்த்தெடுத்த விஞ்ஞான பீடத்தின் நலன் சார்ந்த அவரது ஆர்வம் அளவில்லாதது.

இன்றுவரை விலங்கியல் துறை சிறப்புக்கலை மாணவர்களுக்கான வகுப்புக்கள், பரீட்சை மதிப்பீடு, ஆய்வு வழிகாட்டல் என துறையின் கல்வித் தரத்தினை பேணுவதில் மெடம் உறு துணையாக இருந்தார். எந்த பீட ஊழியர்களை கண்டாலும் வழி மறித்து அவரது குடும்பத்தினரின் சுகம் அறிந்துதான் செல்வார். உயர்ந்த, நிமிர்ந்த, எளிய நடையுடன் Madam முன்னால் வரும் போது எவருக்கும் ஒரு மரியாதை தானாகவே வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் தொலைபேசியில் உரையாடும் போது அல்லது நேரில் யாழ்ப்பாணம் செல்லும் போது எப்படிச் சுகம் மெடம் என்று கேட்டால் எப்பொழுதும் I am perfectly alright என்று தான் சொல்வார். அவரின் இத் தகைய Confidence Statement என்னை மிகவும் கவர்ந்தது. அவருடன் தொலைபேசியில் உரையாடுகின்ற போதெல்லாம் எனது மகளையும் அழைத்து அவளின் படிப்பு பற்றி விசாரிப்பார். Madam இன் பிறந்த தினம்தான் எங்கள் திருமண நாள். இருவரும் மாறி மாறி வாழ்த்து களை தெரிவித்துக் கொள்வோம்.

புதிதாகக் கட்டப்பட்ட விலங்கியல் துறை கட்ட டத்திற்கு மெடத்தை அழைத்து கௌரவிக்க வேண்டு மென்று நினைத்திருந்தேன். அது கனவாகிப் போய் விட்டது.

முன்னாள் விஞ்ஞான பீடாதிபதியும் இன்னாள் விலங்கியல் துறைத் தலைவியுமான கலாநிதி முத்து லட்சுமி வினோபாபாவின் மேற்கண்ட அஞ்சலிக் குறிப்பிடை துறைசார்ந்தும், துறைசார்ந்த ஆளுமை சார்ந்து அக்கா விளைவித்த நம்பிக்கையின் ஆற்றல் புலப்படும். முத்துவும் வினோபாவாவும் அக்காவின் பிரிவு செய்தி அறிந்த மறுகணமே ஓடோடி வந்திருந்தார்கள். தன்னுடைய விலங்கியல் துறையில் தனக்குப்பின் ஒரு பேராசிரியர் என வினோபாபா மீது அக்கா கொண்ட அன்பும் பேராசிரியர் வினோபாபா அக்கா மீது கொண்ட மதிப்பை அவர்களது இந்த வரவு உணர்த்தி நிற்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கிழக்குப் பிரதேச மேம்பாட்டில் மெடம் கொண்ட பங்கினை எவராலும் அழித்துவிட முடியாது. வெறும் பதவிகளுக்காக பலரும் வந்து செல்வார்கள் ஆனாலும் உண்மையான கல்வி ஈடுபாட்டுடன் கிழக்குப் பல்கலைக்கழக மேம்பாட்டில் இதயபூர்வமான அக்கறையுடன் வாழ்ந்த மெடம் அவர் களின் நினைவுகள் நிலைத்து நிற்கும். விஞ்ஞான பீடம் அதனுடைய வளர்ச்சி என்பதற்கு அப்பால் விடுதிக் காப்பாளராகவும், கலைத்திட்ட வடிவமைப்பாளராகவும் அவரது பணிகள் விரிந்திருந்தன. மாணவர்களின் பண் பாட்டு மேம்பாட்டுக்கென பல்கலைக்கழக வளாகத்து இன்று நிமிர்ந்து விளங்குகின்ற பிள்ளையார் ஆலயத்தினை அமைப்பதிலும் அதன் முதலாவது கும்பாபிஷேகத்தினை நிறைவு செய்தலிலும் பெருந்தலைவராக இருந்து வழிகாட்டிய நினைவு கள் மிகவும் உயர்வானவை.

பேராசிரியர் வினோபாபாவின் அஞ்சலி உரைக்குள் அக்காவின் மேலான வாழ்வு வெளிப்படும்.

அக்காவுடன் ஆரம்ப கால முதலே பல்கலைக்கழக கலைத்திட்ட உருவாக்கச் செயற்பாடுகளிலும் சமூக நலன் சார்ந்த பணிகளிலும் தோளோடு தோள் கொடுத்து செயல் பட்டவர் கலாநிதி த. ஜெயசிங்கம். இறுதிப் பிரியா விடைப் பொழுதில் கலந்து கொண்டு அவர் செய்த அஞ்சலியும் ஆற்றிய உரையும் தொடக்க காலமுதலாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கா ஆற்றிய காலத்தினாலான பணிகளைப் பற்றிய ஒரு நேரடி வாக்குமூலமாகவே அமையும். கிழக்குப் பிர தேசத்து மக்களிடத்து இன்று வரை காக்கப்பட்டுள்ள அக்கா பற்றியை பெருமைப்படும் படியான உணர்வு ததும்ப வெளிப்படுத்துவார் ஜெயம்.

> சவால்களை சாதனைகளாக்கிய கிழக்குப் பல்கலைக் கழகத்தின் தாயான பேராசிரியர் மனோ சபா ரத்தினம் அவர்களின் அர்ப்பணிப்பான பணிகளை வார்த்தை களுக்குள் அடக்கி விடமுடி யாது. அன்றைய காலச் சூழலில் எதிர்கொண்ட பல்வேறு பிரச் சினைகளை யும் துணிச்சலுடன் எதிர்கொண்டு பல்கலைக் கழகத்தின் வளர்ச்சிக்காக அவர் பெரிதும் பாடுபட்டார். மாணவர் நலனிலும் சமூக நலனிலும் அவர் கொண்ட அக்கறை உயர்வானது. நெருக் கடியான காலகட்டங்களில் தாயாக மக்களோடு மக்களாக நின்று அவராற்றிய பணிகள் இன்றுவரை பெருமதிப்புடன் நினைவுகூரப்படுகின்றன. அவரோடு இணைந்து பல்கலைக்கழகத்தில் 40,000 அதிகமான அகதிகளாக இருந்த மக்களுக்கு சேவை செய்யக் கிடைத்த சந்தர்ப்பத்தை இவ்வேளை நினைவுகூராது இருக்க முடியாது. பதவிகளுக்காக அலைகின்ற வர்கள் மத்தியில் தனக்கான உயர்வுகள் அநீதியான முறையில் மறுக்கப்பட்ட போதிலும் கூட தொடர்ந் தும் கிழக்கு இலங்கைப் பல்கலைக் கழகத்தில் பல ஆண்டுகள் விஞ்ஞான பீடாதிபதியாக கடமை யாற்றினார். ஓய்வு பெற்ற பின்னரும் கூட கிழக்குப் பிரதேசத்தின் சுற்றுச் சூழல் பாதுகாப்புக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்ச்சித் திட்டங்களில் அர்பணிப்போடு செயல் பட்டார். இன்று கரையோரப் பிரதேசம் எங்கும் நிமிர்ந்து நிற்கின்ற கண்ணா மரங்களும், சவுக்கு மரங்களும் அவர் அழியா நினைவுகளை பேசிக் கொண்டிருக்கின்றன.

அக்காவின் அர்ப்பணிப்பான பணி என்பது கிழக்குப் பல்கலைக்கழத்தில், கிழக்கில் மட்டும் நிகழ்ந்த ஒன்றல்ல. அவளது வாழ் நாள் முழுமையும் அவள் வாழ்வியலை நெறிப்படுத்திய உயர் தனி விழுமியம் என்றால் மிகை யில்லை. தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியில் ஆசிரியராக இருந்த காலத்து அவள் காட்டிய வழியில் தன்னுடைய வாழ்வின் உயர்வுகள் அமைந்தவாற்றினை அண்மையில் இங்கிலாந்து மகாராணியின் சேர் பட்டத் தினைத் தனதாக்கிக் கொண்ட பேராசிரியர் சேர். எஸ் அருள்குமரன் அவர்களின் அஞ்சலிக் குறிப்பிடை நாம் காண முடியும். அண்மையில் அருள்குமரனின் சாதனை யைப் பாராட்டி மகாஜனக் கல்லூரி எடுத்த பெருவிழாவுக் காக வந்திருந்த அருள்குமரனுடன் மிகுந்த பெருமிதத்து டன் அக்கா சமூகமளித்திருந்தது அக்காவை வீட்டுக்கு அழைத்துவந்து நெடுநேரமாக உரையாடி மகிழ்ந்ததும் அவரது அமர்ப்பணிப்பான ஆசிரியப் பணியின் அறு வடை என்பேன்.

**Tribute to a great Soul Professor Mano Sabaratnam**

Professor Mano Sabaratnam was a teacher, mentor, philosopher, philanthropist and the saviour of fellow humans. Prof Mano was the pillar of the society where ever she lived her sphere of activity extended beyond her teaching responsibility. She was a strict disciplinarian, frank



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

in her opinion and words and did not have any hesitation in expressing her views. Prof Mano served the community admirably.

My association with Prof Mano was when I studied my A levels at Mahajana College. In fact she was instrumental in influencing my admission. I not only learnt Zoology but more importantly the art of giving direct and appropriate answers to questions. I learnt to focus on my thoughts and my words I spoke and wrote and subsequently on every action. Needless to say this helped me to enter medical school in Colombo and to excel in my career as Professor and Chairman of Obstetrics & Gynaecology at the National University of Singapore, Derby-University of Nottingham and finally at St George's medical school, University of London.

After I left Mahajana, I was in touch with Prof Mano as she was one of my favourite teachers who enthused me and wanted me to do well in life. From Mahajana she joined the postgraduate section of Jaffna College and requested me to help demonstrate zoology dissections in the undergraduate section. I enjoyed performing this duty and it encouraged me to become a doctor and teacher. Prof Mano subsequently joined the University of Colombo that helped us to maintain the intellectual communication. Her research moved her to the UK but we were in touch with mail communication about her passion for research that planted the seeds of research in my mind. I was delighted when Prof Mano was appointed as Professor and Dean of the Eastern University of Sri Lanka. Then I was God smacked at the difficulties she had to undergo not in her teaching vocation but to help fellow human beings who were put to great tragedy. The way she handled these trials and tribulations emphasised her great human spirit and deeds to help others. She will be remembered for her significant contributions to mankind.

As for me she will remain as a great teacher, mentor, and a soul who dedicated her whole life to assist and uplift hundreds and thousands of students and people who had to endure hardships. Her memory will linger on to every one who had come across her in some way or other. My prayers for her soul to rest in peace.

Prof. Sir S. Arulkumaran
St. George's University of London
27'th October 2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காவிற்கான பேராசிரியர் அருள்குமரனின் அஞ்சலி அக்காவின் ஆளுமை முழுமையை அழகாகவே சித்திரிக்கும்.

அக்காவின் மறைவுச் செய்தியை அறிந்த கணமே அவரின் அன்புக்குப் பாத்திரமான இன்றைய எங்களின் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் Kshanika Hirinburegama,

The late Emeritus Professor Mano Sabaratnam was a very competent academic. She was very committed to her work and was working day and night at the University of Colombo. She was strict student behaviour and as student in the faculty of science, University of Colombo, we appreciated her genuine commitment to her work.

என அக்காவின் அர்ப்பணிப்பான வாழ்வினை போற்றி நிற்பார். ஆயிரக்கணக்கான பேருக்கு அரும் பணிகளைச் செய்தவர் பேராசிரியர் மனோ. அத்தனை பேருடைய அன்பும் அவரோடும் அவரைச் சார்ந்த அனைவரோடும் உடனிருக்கும் என கலங்கி நின்ற எனக்கான பேராசிரியர் ஷானிகாவின் ஆறுதல் வார்த்தைகள் அமையும்.

சில நாள் பழக்கத்தினுள்ளே அக்காவை தன்னுடைய சொந்தச் சகோதரியாகவே வரித்துக் கொண்ட அவுஸ்திரேலிய RMIT பல்கலைக்கழக பேராசிரியரான யசோ அவர் கணவர் David வும் அக்காவின் பிரிவுத் துயரைத் தாளமுடியாமல் அழுதழுது எனக்கு ஆறுதல் சொல்வார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள். சென்ற வருடத்தில் இதே காலப்பகுதியில் யசோவின் பல்கலைக்கழக மாணவர்களோடு மலாவியில் நாங்கள் மேற்கொண்ட ஆய்வின் பெறுபேறான ஏட்டினை அக்கா வின் கைகளினாலேயே வெளியிட நினைத்திருந்தமை யினைச் சொல்லிச் சொல்லி கலங்கிடும் பேராசிரியர் யசோவின் ஆத்ம ஒலியாக இந்தக் கவிதை வரிகள் அர்பண மாகும்.

*Mano Acca, beloved sister, comrade, scholar*
*Gracious teacher wonderful mentor*
*Are you really gone?*
*Like a pillar, in the temple*
*Tall, unwavering, devoted to us*
*A heart-filling presence at the door... when we returned from a day at work, in the challenging field of research and of study and that heart-wrenching war*

*Your love like a whisper flutters through the shutters of our house*
*...ever so softly*
*Through our lives, our memories, a thousand journeys...*
*Laughter, tears, tantrums, sadness, joy -*
*Twirling though them all...ever so lightly*

*What about those long conversations you promised we would have...*
*I didn't get a chance to say how much I was looking*
*forward to it all again,*
*....in that little corner of love and family in*
*Kanthan Arul in Jaffna.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*We love you, we miss you*
*We carry your name, Mano Acca*
*With honour, pride and love*

*You will always be with us*
*There can only be ONE like you.*
*You will always be in our hearts*

மெடம் மறைந்த செய்தியைக் கேட்டு அதிர்ச்சி யடைந்தேன். எங்கள் பல்கலைக்கழகத்திற்கும் கிழக்குச் சமூகத்திற்கும் அவர் செய்த சேவை அளவில்லாதது. எனது காலத்தில் அழியாத அவர் நினைவுகளைப் பேண வழிசெய்வேன்.

என அக்கா மறைந்த செய்தியை அறிந்தவுடன் தொலைபேசியின் வழியாக தன்னுடைய துயரை வெளிப் படுத்துவர் இன்றைய கிழக்குப் பல்கலைக்கழகத் துணை வேந்தரான கோபி.

அக்காவின் கல்வி மேம்பாட்டுப் பணிகளினால் உயர்ந்த அத்தனை பேர் உள்ளங்களிலும் அவர் பற்றிய உயர்வான பதிவுகளும் போற்றுதல்களும் காக்கப்பட் டுள்ளன. இந்தவகையில் அக்காவின் மறைவுச் செய்தியை அறிந்த கணத்தே அவர் நினைவுகளை போற்றி பகிரங்க அஞ்சலி நிழ்வினை நடத்தியதோடு அவர் மறைவு பற்றிய முதலாவது ஊடக அறிக்கையும் அவரது முதல் தொகுதி மாணவர்கள் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

வசதிவாய்ப்புக்களை தேடி சுகபோகங்களை அனுபவிப்பதில் மனித குலம் போட்டி போடுகின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலகட்டத்தில் தனக்குக் கிடைத்த வசதி வாய்ப்புக்கள் யாவற்றையும் உதறித்தள்ளிவிட்டு கிழக்கு மண் கல்வித் துறையில் மேன்மையுற வேண்டுமென்ற பற்றுடன் வட இலங்கையில் இருந்து வந்து அர்ப்பணிப் புடன் கல்விப்பணியாற்றிய பேராசிரியை மனோ சபாரத்தினம் அவர்களின் மறைவு ஒட்டுமொத்த தமிழ்பேசும் மக்களுக்கு பேரிழப்பாகும்.

தற்கால மனிதர்களை வாட்டி வதைக்கும் சமூக நோய்களான பிராந்தியவாதம், இனவாதம், மதவாதம், குலவாதம் என்பவற்றுக்கு சாவுமணி அடித்து மனிதத்தை வளர்த்த அன்னையாக வாழ்ந்து வரலாறு படைத் துள்ளார். இந்த வகையில் அவர் காலமாகவில்லை... காவியமாகியுள்ளார். வடக்கு - கிழக்கிற்கான கல்வி இணைப்புப் பாலமாக உள்ளார் என்பதே உண்மையாகும் என அக்காவின் முதல் தொகுதி பட்டதாரி மாணவர் களான இன்றைய கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலை அதிபர் பிரபாகரன், மூதூர் வலயக் கல்விப் பணிப்பார் எம்.கே.எம். மன்சூர், கல்முனை கல்வி வல பிரதிக் கல்விப் பணிப்பாளர் வே. மயில்வாகனம் ஆகியோரின் கூட்டு அனுதாபச் செய்தி அமையும். (தினக்குரல்/ தினகரன் 2014. 10. 14)

அக்காவின் ஆரம்ப காலத்திலேயே சாதாரண ஊழியர்களாக இணைந்து கொண்டு இன்று பல்வேறு பதவி உயர்வுகளுடன் உள்ள பலரும் இறுதி அஞ்சலிக்காக இங்கு வந்திருந்தார்கள். அன்று வரமுடியாமல் போனவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் எப்படியாவது ஒரு தடவை அக்கா வாழ்ந்த வாழ்விடத் துக்கு வந்து எங்களோடு உறவாடிச் செல்ல வேண்டும் என்ற தவிப்புடன் வந்து செல்கிறார்கள். அவர்கள் அனைவருடைய மனங்களிலும் ஒரு தெய்வமென அக்கா நிறைந்துள்ள பான்மை இவர்களது அழுகையிடையேயும் அஞ்சலி உரைகளிடையேயும் புலப்படும்.

அக்காவின் மறைவுக்கு இரண்டு தினங்களுக்கு முன் யாழ்ப்பாணம் வந்து வைத்திய சாலையில் அக்காவைக் காணமுடியாமல் போன அழுவார் இஸ்மையில்.

"சேர் கல்வி யுகம் அழியும் வரை மெடமும் இருப்பா..... இப்பா அவ மறைந்திருக்கா.... அவ எங்களை விட்டுப் போகமாட்டா....." என எனக்கு ஆறுதல் சொல்லிக்கலங்கும் இஸ்மாயிலுக்கு ஆறுதல் சொல்ல முடியாமல் நான்.

"அன்று பல்கலைக்கழக விடுதியில் கோழிக்குஞ்சு களை சிறகுக்குள் வைத்துக் காப்பதுபோல மெடம் இல்லை என்றால் எனக்கு இந்த வாழ்வே இல்லை. வழிகாட்டியாக இருந்து துணைபுரிந்த தெய்வத்தின் ஆத்மா சாந்தியடை இறைவனைப் பிரார்த்திக்கிறேன்" என்பார் முறிவு வைத்தியரான கருணாகரன்.

"எந்த வித எதிர்பார்ப்பும் இல்லாமல் உதவி செய்யும் மெடத்தினால் தான் இன்று நான் பல்கலைக்கழத்தில் இருகின்றேன். எனக்கு மட்டுமல்ல என்னைப் போல எத்தனையோ பேருக்கு வழிகாட்டியாக வாழ்ந்தவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் பல ஆண்டுகள் இருந்து சேவை செய்ய முடியாமல் போனதே" எனக் கலங்குவார் பௌதீகவியல் துறையைச் சேர்ந்த சௌந்தரராசா.

"என்னுடைய இன்றைய வாழ்வென்பது மெடம் தந்த பிச்சை" என கலங்கி நிற்பான் அவரது ஆரம்ப கால மாணவர்களின் ஒருவரான இன்றைய வடமாகாண இணைப்புச் செயலாளரான சண்முகப்பிரியன்.

இதுபோலவே எல்லோருடைய அஞ்சலிகளும் அக்காவினாலே கிடைத்த வாழ்வு அவரது வழி காட்டலி னாலே அமைந்த உயர்வு என்பதனையே வெளிப்படுத்தி நின்றன.

இந்தவகையில் எல்லோரது உணர்வுகளதும் எல்லா உணர்வுகளினதும் திரட்சியாக நிர்மோகனின் அஞ்சலி துலங்கிடும்.

எல்லோரையும், உங்கள் பிள்ளைகளாகவே நேசித்தீர் களே! நல்லதொரு குடும்பம் ஒரு பல்கலைக்கழகம் என்பார்கள். ஆனால் கிழக்குப் பல்கலைக் கழகத்தை ஒரு குடும்பமாக நேசித்தீர்களே! அப்பழுக்கற்ற மனப் பான்மை யுடைய உங்களின் ஒவ்வொரு செயற்பாடும் கண்டிப்புடன் கூடிய பேச்சு நடையும், மனித மேம்பாட்டு மன நிலை யைப் புலப்படுத்தும்! மனதளவில் இலேசாக இருந்தாலும், செயலளவில் உறுதியாக இருந்தீர்களே! சரியானதை எடுத்துச் சொல்வதை தங்களது கடமை என நினைத் தீர்களே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று பல்கலைக்கழகத்தில் அகதிகளாக இருந்த எங்களை மதிலுக்கு மறுபக்கம் அவர்கள் கொண்டு சென்றவேளை "என்னையும் ஏற்றுங்கோ" வென்று இரு கைகளையும் உயர்த்தியபடி நின்றீர்கள். மதிலால் நீங்கள் ஏறிவரும்போது மதில் சுவரில், உங்கள் பொன்னான முழங்கால்கள் இரண்டும் உரசுப்பட்டு, இரத்தம் சொட்டச் சொட்ட நின்று அந்த படை உயர் அதிகாரியிடம் கிட்டத் தட்ட 02 மணித்தியாலங்களாக, இவர்கள் எல்லோரும் அப்பாவிகள், எனது பிள்ளைகள் என்பதை மீண்டும், மீண்டும் வாதாடி அப்பாவிகள் எல்லோரையும் விடுவித்து உயிர்ப்பிச்சை கொடுத்தீர்களே! அதை எப்படி மறப்பது? விடுவிக்கப் பட்ட எல்லோரும் உங்கள் காலடிகளைத் தொட்டு வணங்கி "நீங்கள்தானம்மா எங்கள் தெய்வம்" என அழுதோமே! மிக வேதனையான காலங்களிலும், எத்தகைய இக்கட்டான சூழ்நிலைகளிலும், எத்தகைய கஷ்டங்கள் வந்தாலும் அதை எதிர்கொண்டு, நியாயத் திற்காக போராடவேண்டும் என்ற மன உறுதியுடன் நின்றீர்களே!

போலித்தன மாய் இல்லாமல் கிழக்குப்பல்கலைக் கழகத்தையும், அதன் மனிதர்களையும் நிஜமாய் நேசிக்கும் நேசம் உங்கள் நேசம் "Madam"!

வெற்றிகளால் கோட்டுக்கு வெளியே போய்விடாம லும், தோல்விகளால் கூட்டுக் குள்ளேயே முடங்கிவிடாம லும் சமப்படுத்திக்கொள்ளும் பக்குவம் உங்கள் பக்குவம்!

அன்பை விதைத்தீர்கள்! மனிதர்களை மதித்தீர்கள்! அவர்களால் உங்கள் அன்பை எப்படி மறக்க முடியும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓய்வு பெற்ற பின்பும் பல ஆலோசனைக் குழுக்களில் இருந்து கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு வழிகாட்டிய உங்களுக்கு, இறுதிக் காலத்திலாவது, கிழக்குப் பல்கலைக்கழகத்தில் "வேந்தர்" என்ற மகுடம் கிடைக்க வில்லையே என்ற வரலாற்றுத் தவறை எண்ணி வேதனை யுறுகின்றோம் "Madam"!

மழை நின்ற போதும், மரங்களில் மட்டும் மழைத் துளிகள் துளித்துளியாய் சொட்டிக்கொண்டிருப்பது போல், கிழக்குப் பல்கலைக் கழக சேவையில் இருந்து ஓய்வுபெற்று பல வருடங்கள் கடந்துவிட்ட பிறகும், தங்கள் இன்னுயிர் இவ்வுலகைவிட்டுப் பிரிந்து விட்ட பிறகும், உங்கள் நினைவுகள் இன்னும் துளித் துளியாய் சொட்டிக்கொண்டே இருக்கின்றன!.

இன்னும்

பேசமுடியாமல் தம் அழுகையை அஞ்சலியாக்கி நிற்பார்கள் தாவரவியல் துறை விரிவுரையாளரான சந்திராவும் என் சமூகவியல் துறை விரிவுரையாளாரான பகீரதியும் இன்னும் கிழக்கிலிருந்து வந்திருந்த இன்னாள் விஞ்ஞான பீடாதிபதி கலாநிதி ராகல், பிரதம நூலகர் திருமதி தவமணி அருள்நந்தி, உதவி நூலகர் சாந்தரூபன், அக்காவின் இன்று வரையான மாணவி ஜீவிதா, மட்டக்களப்பின் அக்காவின் அயல் வீட்டு உறவான மலரக்கா, வீரசிங்கம் ஐயா, பிறேமன், ஜெயச்சந்திரன், மாணவர்களான கண்ணன், துவாரகன், அங்கயற்கண்ணி என நீளும் உறவுகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காவிற்குப் பிடித்த எழுத்தாளன் பிரதீபன்...

தள்ளாத வயதிலும் அக்காவிற்கான அஞ்சலியை எழுதி அனுப்பிய நூற்றாண்டு கண்டு முதுபெரும் புலவர் அருட் கலாநிதி வை.கா. சிற்றம்பலம் ஐயா... அன்ரனிப் பிள்ளை சேர்...

காரைதீவில் Wheel Chair குள் இருந்தபடி என் கண்ணீரைத் துடைகக்கும் எத்தனத்தில் உள்ள என் குகன். அக்காவின் கிரியைகள் யாவிலும் சலிக்காமல் உடன் இருக்கும் கார் மாமா கண்ணன்.

வாரமொரு தடவையேனும் அக்காவுடன் உறவாடத் தவறாத ஸ்ரீநிவாசன், மணிமேகலை, "நீ என்ர பிள்ளையடி என்னை ஆளாக்கிவிட்ட தெய்வம் மெடம்" என பிரான்சிலிருந்து கதறும் சியாமளா.......

லண்டனில் இருந்து அக்காவின் செய்தியில் உறைந்துபோன கௌரியின் தங்கை பவானி...

அக்காவின் நலனில் என்றுமே அக்கறையான சந்திரா யோகநாதன்....

அக்காவின் பிள்ளைகளில் ஒருவனாகி அவளின் இறுதி அஞ்சலி தலைமைப் பொறுப்பையும் ஏற்று எனக்கு ஆறுதலாக உடனிருக்கும் இராஜேஸ்கண்ணன்.......

அக்காவுக்கு இறுதி அஞ்சலி செலுத்தவென எங்கள் உறவினர்ளோடு பல்கலைக்கழக துணைவேந்தர், முன்னாள் துணைவேந்தர்கள், பீடாதிபதிகள், பேராசிரியர் கள், என் சக தோழர்கள், ஊழியர்கள், மாணவர்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரியின் வேம்படி மகளிர் உயர்தர தேசிய பாடசாலை, யாழ். திருக்குடும்ப கன்னியர் மட தேசிய பாடசாலை, மகாஜனக் கல்லூரி ஆகியவற்றின் ஆசிரியர் சமூகத்தினர், எங்கள் சமூகத்து அரசியலாளர்கள், வைத்தியர்கள், சமூகப் பணியாளர்கள் எனப் பலரும் திரண்டிருந்தார்கள்.

அக்காவுக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு மான உறவு யாழ்ப்பாண வளாகமாக ஆரம்பித்த காலமுதலானது. அன்று விஞ்ஞான விஞ்ஞான பீடத்திற் கென யாழ்ப்பாணக் கல்லூரியை அதன் ஆய்வுகூடங்களை பொறுப்பெடுக்கும் பணிக்கென அக்காவின் சேவை பெறப்பட்டது. அதற்குப் பின்னால் அவ்வப்போது வருகைப் பேராசிரியராகவும் அவரது பணி தொடர்ந்தது. பின்னை நாட்களில் அவரது சுற்றுச் சூழல் மேம்பாடு சார்ந்த, பங்கேற்பு முறையியலின் வழியான சமுதாய மேம்பாடு பற்றிய அனுபவங்களை பகிர்ந்திடும் களங்களாக எங்கள் பல்கலைக்கழகத்து மனிதவள மேம்பாட்டு அலகும் என் சமூகவியல் துறையும் பயன் கண்டுள்ளன. இவையனைத்திற்கும் அப்பால் என்னுடைய மாணவர்கள் ஒவ்வொருவரும் அக்காவின் மாணவர்களா னார்கள். என்னுடைய துறையும் சக ஆசிரியர்கள் ஒவ்வொருவரின் கல்விசார்ந்த முன்னேற்றத்திலும், அவர்களின் குடும்ப நலன்சார்ந்த விடயங்களும் அக்கா கொண்டிருந்த அக்கறை அளவில்லாதது.

அக்காவின் கல்விசார் அக்கறையென்பது அவரது பல்கலைக்கழக மாணவர்களுக்குள் மட்டுப்பட்டதல்ல. தன்னுடைய குடும்ப உறவுகள் ஒவ்வொரும் தன்னைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல கல்வியிலே உயர்ந்திட வேண்டும் என்பதில் அவர் கொண்ட கரிசனையும் அதற்காக அவர் செய்த தியாகங்களும் கொஞ்சமல்ல. பெறாமக்களான ஜெயந்தி, சுரேன், பேரப்பிள்ளைகளான ராஜ், சகிலா குடும்பத்தினர் மருமக்களான சிவகுமார் (முப்பது முப்பத்தைந்து வருடங் களுக்குப் பின் இரண்டு வாரங்களுக்கு முன்னர் தான் கனடாவில் இருந்து வந்து அவரோடு அளவளாவிச் சென்றிருந்தார்), கேதீஸ், சுசி, சுபத்திரா, முருகன், கண்ணன், தாசன், சுகன்யா, குட்டி குடும்பத்தினர், மகிந்தன் குடும்பத்தினர் என நீளும் உறவுகள்......

எட்டு வயதிலிருந்தே அக்காவின் பிள்ளையாய் இன்றுவரை "அம்மா" என்று அவரின் பிரிவு வேளையில் இந்த நிமிடம் வரைக்கும் எங்களோடு உடனிருந்து தவிக்கும் கவிதா, அவள் கணவர் இளைய தம்பி அவள் பிள்ளைகள் பிரதீபன், பிரதீசன், துவாரகா........

அத்தனைபேரினதும் கல்வி, வாழ்க்கை மேன்மை களுக்காக இறுதி மூச்சுவரை அக்கா செய்த நன்மை அளவிலாதவை.

இத்தனைக்கும் எங்கள் எல்லோரிடத்தும் அவள் எதிர்பார்த்தது எங்கள் கல்வி மேம்பாட்டினைத் தான். அவளுக்கு நாங்கள் தரக்கூடிய மிகப் பெரிய நிறைவாகவும் அதுவே அமைந்தது.

வைத்தியசாலையிலிருந்த இறுதி நாட்களில் அவளைப் பார்க்க வந்திருந்த முருகன் - தேவி மகள் மாதங்கி மருத்துவ பீடத்திற்கு தெரிவான பெருமிதத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எங்கள் குடும்பத்தின் முதல் டொக்டர்" என அருகிருந்தோருக் கெல்லாம் பிரகடனப்படுத்திய கணங்கள் வரை அவரது இந்த ஆதங்கத்தின் வெளிப்பாடுகளை காணமுடியும். ஒக்டோபர் 6 ஆம் நாளில் தன் ஆங்கில ஆசிரியருமான ஆசை மாமிக்கான ஆசை வாழ்த்து மடலினை அம்பிகை கொடுத்த போது அவளை வாரியனைத்து முத்தம் தந்த கணங்களில் அவளின் எதிர்காலம் பற்றிய அவரது கனவுகள் ஒளிவிடும்.

அக்கா எதிர்பார்த்த கல்விப் பெருமகிழ்வினை நிறைவாகத் தரும் பாக்கியம் எனக்கானது.

தனக்கு மறுக்கப்பட்ட அந்த துணைவேந்தர் பதவி என்னைச் சேர்ந்த போது அவள் அடைந்த மகிழ்ச்சி எல்லையில்லாதது. "என்னுடைய தம்பி Jaffna V.C என்னுடைய தம்பி Senior Professor அவன் ஒரு பெரிய Artist என்றெல்லாம் ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தாயாகி அம்மாவுக்குப் பின் அக்காவே அம்மாவுமாய் நிறைந்திட என்ன புண்ணியம் செய்தேன்.

***

இந்த நிமிஷம் வரை இறுதி கிரிகைகள், அதனோடிணைந்த சடங்குகள் பற்றிய வழிகாட்டல்களுடன் உடன் இருப்பார் சோதி அன்ரி, அக்காவின் அண்ணி, கனகரண்ணரின் வாழ்க்கை துணைவி. எனக்குத் தைரியம் சொல்லியவாறு தான் கலங்கி நிற்பார்.

"எங்கள் திருமணத்தை அவவே செய்து வைத்தார். பெண் பார்த்து எல்லாம் சிறப்பாக நடத்தி நின்றார்......."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்கின்ற சோதி அன்ரியின் அழுகை எனக்குள் எதிரொலிக்கும்.

எனக்கு பெண் பார்த்து கௌரியை என் வாழ்க்கை துணையாக்கியதும் அக்கா தானே என பதிலுக்கு அழுது நிற்பேன்.

அக்காவின் பிரிவுச் செய்தி அறிந்த கணமே கொழும் பிலிருந்து ஓடிவந்த என் மைத்துனன் காந்தன் இந்தக் கணம் வரை நிகழும் கிரிகைகள் யாவிலும் என்னைத் தாங்கி நிற்பான், அவனோடு அனைத்திலும் முருகன்.

அன்று நானும் கௌரியும் மட்டக்களப்பில் நடந்த அப்பாவின் இறுதிச் சடங்குகளுக்கு கூட போக முடியாத கொடுமையான தேசச் சூழலில் காந்தனோடு உடனிருந்து ஆறுதலானவள் அக்கா. காந்தனின் கல்வி மேம்பாட்டில் அக்காவின் இடம் தனியானது. சென்ற ஆண்டில் நாங்கள் எல்லோரும் பெருமைப்படும் படியாய் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் சுற்றுச்சூழல் விஞ்ஞானத்தில் M.Sc பட்டம் பெற்ற காந்தனின் ஆய்வின் வழிகாட்டியும் அக்கா தான். எங்களைத் தேற்றுவதற்காக தனது அழுகையை விழுங்கியபடி கருமங்களை வழிப்படுத்திக் கொண்டி ருக்கிறான்.

கூடவே யோகா அண்ணை, அண்ணி, பிள்ளை கள்.....

தங்கச்சி காந்தா....

அக்கா மறைந்த நாள் முதலாக உணவையே மறுத்து தனித்திருக்கும் பப்பி...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்பொழுதுமே என்வாழ்வின் இன்பத்திலும் துன்பத்திலும் உடனிருக்கும் என்னுயிர் தோழன் சிவராஜா அனைத்தினதும் மேற்பார்வையாளனாக அக்காவின் சடங்குகளில் ஒரு குறையும் வாராது காத்து நிற்கின்றான்.

இந்தப் பொழுதுகள் யாவிலும் ஒரு நிழலாக "அக்காவின் செல்லப் பிள்ளையான" என் மாணவன் காந்தன் தன் கண்ணீரைத் துடைத்துடைத்து "எழுதுங்கோ சேர்" என்ற படி தன் கந்த சஷ்டி விரத ஆசாரங்களுடனும் கூட உடனிருந்து நான் எழுதுபவற்றை கம்யூட்டரில் பதிந்து கொண்டிருக்கிறான்.

ஆனால்......

"எழுது.... எழுது.... பொழுதுகளை வீணாக்காமல் நல்ல புத்தகங்களை எழுது, பிள்ளைகளுக்குப் பயன்படும், நீயும் நிலைத்திருப்பாய்!" என அன்று வைத்தியசாலையில் அனுமதிப்பதற்கு சில மணித்துளிகள் முன்னர் கூட இடித்துரைத்த என் அக்காமட்டும் உடன் இல்லை...........

"விரைவில் என் அடுத்த நூலைத் தருவன்" என்று நான் சொல்லி ஒரு வாரம் கூட ஆகவில்லை......

எனது அடுத்த நூல் என் அக்காவின் கதையாகுமென அவளோ நானோ நினைத்தில்லை.

வைத்திய சாலையில் அனுமதித்த அன்றிரவு மயக்கம் தெளிந்த கையோடு "கௌரி பயப்படுறியா.... நான் இன்னும் ஐந்தாறு வருஷங்கள் இருப்பன்..... அம்பிகை ஓ. எல். எடுக்கும் வரையாவது நான் இருப்பன்..." என்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கா சொன்ன ஐந்து வருடங்கள் ஐந்து நாளுடன் முடிந்து போன விதிக்கு ஆறுதல் சொல்ல அக்கா இல்லை.

இவ்வேளை........

வெறும் பலகையாகிப் போன எம் வாழ்வின் துயரிடை அக்காவும் அம்பிகையும் மாறி மாறி எழுதி எழுதிப் பாடம் படித்த அந்த Maggie போட்டுடன் ஒரு மூலையில் தனித்திருந்த அம்பிகை, "அப்பா ஆசை மாமியைப் பற்றி எழுதுறீங்களா" என்ற படி இந்த எழுத்தின் கனமறியாமலே அருகில் வருவாள்.

அவளை அள்ளி அணைத்த கணங்களில் அவளுக்குள் அக்காவின் விஸ்வரூப தரிசனம் வரமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவுரை

"தனக்கென பொருள் எதையும் சேர்க்காதவள்
தளர்ந்தொரு நாள் நோய் என்றும் இருக்காதவள்
எனக் கெனச் சொல்லித் தரும் மந்திரங்களில்
உழைப் பென்ற அற்புதமே உயர் வென்பவள்

என்று சந்தன மேடை எனும் கவிதைத் தொகுதியில் பேராசிரியர் சண்முகலிங்கன் அக்கா என் ஆதாரத்தைப் பாடிநிற்பார். "உழைப்பென்ற அற்புதம்" - இந்த மந்திர மொழிக்கு இலக்கணமாக வாழ்ந்து பேராசிரியர் மனோ சபாரத்தினம் அவர்களின் வாழ்வு இலக்கியமாகும் தருணமிது.

எங்களது பேராசிரியர் சண்முகலிங்கன் அவர் களது வாழ்வுக்கும் உயர்வுக்கும் மாத்திரமன்றி பலரின் வாழ்விலும் "உழைப்பின் உன்னதத்தின் வழியேதான் உயர்வு" என்பதை உணர்த்தியவர் பேராசிரியர் மனோ சபாரத்தினம் அவர்கள்.

அரவணைப்பில் தாய்; அதட்டல் மிகு வார்த்தை களில் அதிகாரி; தெளிவு மிகு சிந்தனையில் புலமையாளர்; சிறுமைகண்டு பொங்குகையில் சீர்திருத்தவாதி; முக மனற்ற பேச்சினிலே நடுநிலையாளர்; நிலையறிந்து உதவுகையில் சேவகி; கண்ணயராக் கவனிப்பில் வழி காட்டி என பல்வேறு பரிமாணங்களில் எம்முள் நிலை பெற்றிருப்பவர்தான் பேராசிரியர் மனோ சபாரத்தினம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள். அவரின் இந்தப் பரிணாமங்களின் சாட்சியப் பதிவாகத்தான் இந்த "என் அக்காவின் கதை".

"என் அப்பாவின் கதை", "என் அம்மாவின் கதை" இரண்டின் தொடர்ச்சி நிலையில் நீத்தார் பெருமையினை இலக்கியமாகப் பதிவாக்கும் இந்த நூலும் நாகலிங்கம் நூலாயத்தின் வெளியீடாகின்றது. பேராசிரியர் மனோ சபாரத்தினம் அவர்கள் நகுலேஸ்வரி பண்பாட்டு நிறுவனத்தோடு இணைந்த நாகலிங்கம் நூலாயத்தின் அதிபராக இருந்தவர். அப்போது என் அம்மாவின் கதையின் பதிப்புரையில்

"உங்களின் இறுதிப் பிரியாவிடையைக் கூட இங்கிருந்தபடியே தரவேண்டிய காலநிர்ப்பந்தம். உங்கள் நினைவுகளை, கனவுகளை வாழ்நாள் உள்ளவரை காத்திருப்போம் வாழவைப்போம்" என்று அன்று அவர் கூறிய "நினைவுகளையும், கனவுகளையும் காப்பவர்களாக" நாங்கள் மாறிவிட்டோம். நெஞ்சு கனக்கும் நினைவுகளாக எம்முள் "Madam"-

சிரேஸ்ட பேராசிரியர் என். சண்முகலிங்கன் அவர்களின் உயர்வுக்கும் "அக்கா" என்ற அற்புத உறவின் ஆளுமைக்கும் இடையில் அமைந்த இயைவைப் பேசுவது இந்த இலக்கியம். புலமையாளர் ஒருவரின் தனிமனித வாழ்வின் தடம் "வையத்துள் வாழ்வாங்கு வாழ்தலின்" இலக்கணமாகிப் போனதை பதிவு செய்யும் இலக்கியம் இது. வெற்றிடமாகிப்போன ஒரு புலமைச் செழுமையின் நித்தியத்தைப் பேசுவது இந்த இலக்கியம். சகோதரனான பேராசிரியர் சண்முகலிங்கனது மனம் வடிக்கும் கண்ணீரின் துளி ஒவ்வொன்றும் மனோ சபாரத்தினம் அவர்களைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவியமாக்கியுள்ளது இங்கே. இது உன்னத அன்பின் காவியம்.

விலங்கியல் துறைசார்ந்த, ஆற்றல் மிக்க பேராசிரியர் என்பதுடன் தன் வாழ்வைச் சுருக்கிக் கொண்டவரல்ல Madam. கிழக்குப் பல்கலைக்கழகத்தைத் தாங்கிய ஆதார தூண்களில் ஒன்றாக அமைந்தவர். "மன்று" என்ற நிறுவனத்திலிருந்து "உயிர் பல்வகைமை" பேணும் உன்னத பணிகளோடு வாழ்வின் அடிப்படைகளைத் தேடி வாடிய மனிதர்களுக்கான சமுதாயப் பணிகளையும் முன்னெடுத்த சமூகவியலாளர். விலங்கினங்களின் உடற்றொழிலை புலமையுறக் கற்றதோடு, இயற்கையோடு இயைந்த வாழ்க்கைக்கு தேவையான சூழலியலை நன்கறிந்து, மனித வாழ்வின் பண்பாட்டுப் பாரம் பரியங்களின் உயர்நெறியை சரியாகப் புரிந்து கொண்டு அவை எல்லாவற்றுக்கும் அப்பால் சக மனிதர்களை சேவையால் உயர்வடையச் செய்தல் என்பதை உன்னத இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்த பேராசிரியர் மனோ சபாரத்தினம் அவர்களின் பெருமை எம் நெஞ்சோடு நிலைக்கும். இந்தப் பெருமைகள் யாவும் ஒருநேர என். சண்முகலிங்கனை எமக்கு ஒரு சமூகவியல் பேராசிரியனாக வடிவமைத்துத் தந்து, எம்மை வழிப்படுத்தி வாழ்வில் உயரவைத்தன.

கொழுகொம்பற்றிருந்த பலரின் வாழ்வு இன்று படர்ந்து செழித்து பரிமளித்திருக்க வழிகாட்டிய எங்கள் Madam அவர்களின் நினைவுகளைச் சுமந்து செல்லும் சிரேஷ்ட பேராசிரியர் என். சண்முகலிங்கன் அவர்களின் பயணத்தில் நாமும் இணைப் பயணிகளாய் உடனிருப்போம்.

**இரா. இராஜேஸ்கண்ணன்,**
சமூகவியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Professor Mano Sabaratnam, a great teacher, mentor, philosopher, philanthropist and the saviour of fellow humans was the pillar of the society where ever she lived.

Her sphere of activity extended beyond her teaching responsibility towards hundreds and thousands of students and people who had to endure hardships.

She will be remembered for her significant contributions to mankind.

நாகலிங்கம் நூலாலயம்

# என் அக்காவின் கதை

Harikanan, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org